குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48] இரக்தாக்ஷி ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—84 [இதழ்

திருக்கயிலாயபரம்பரைத்

தருமையாதீனம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ

மகாலக்ஷ்மி

துர்க்காபரமேசுவரி

நவராத்திரி விழாவில்


சதசண்டி வேள்வி

25—9—84

முதல்

4—10—84 வரை

நடைபெறும்



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

அறிவைத் திருப்பிநின் பாதார
விந்தம் அடையவல்ல
நெறியைக்கொடுத்து நிறுத்திஇனே
யேநின் மலாஇனிஎன்
பொறியைத் தவிர்த்துநின்
சாகர பூரணத்தைப் [ஆனந்த
பிறிவற் றிருக்கவைப் பாய்எனை
ஆண்டருள் பிஞ்ஞகனே.

–சொக்கநாதக் கலித்துறை 11

ஆசிரியர் :–

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :–

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்

குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43 || 10–9–84 || இதழ் 10

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஞானவேள்விக்கு நன்கொடை நல்குவீர் | 465 |
| 2 | தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... | 469 |
| 3 | கடிதங்கள் | 75, 487, 497 |
| 4 | காசிவாசி சுவாமிகள் அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை ... | 476 |
| 5 | அபிராமி அந்தாதி ... | 481 |
| 6 | தன்னை நினையத் தருதல் ... | 485 |
| 7 | திருவருட்பாத் திரட்டு | 488 |
| 8 | ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் அன்பகம் செவிடர் – ஊமையர் பள்ளி ... | 493 |
| 9 | அகத்திக்கீரை ... | 495 |
| 10 | கேதாரம் நோக்கி . ! .. | 498 |
| 11 | கதிரவன் குடும்பம் ... | 502 |
| 12 | திருநாவுக்கரசர் ... | 506 |
| 13 | சைவசித்தாந்த பண்பாட்டு ஆய்வுக் கழகம் ... | 512 |
| 14 | செய்திகள் ... | 514 |
| 15 | எதிர்காலம் ... | 617 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12 ஆயுள்சந்தா உள்நாடு ரூ. 125
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 35 ஆயுள்சந்தா வெளிநாடு ரூ. 350

தருமையாதீனம்

# ஸ்ரீ கயிலைக்குருமணி நினைவுச் சிறுகதைப்போட்டி

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் குருபூஜை நினைவாக இந்தச் சிறுகதைப்போட்டி அறிவிக்கப்படுகிறது.

சிறுகதைகள் அனுப்பப்பட வேண்டிய கடைசிநாள்

30—9—84

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு ரொக்கம் | .... | ரூ. | 1001—00 |
| இரண்டாவது பரிசு | .... | ரூ. | 501—00 |
| மூன்றாவது பரிசு | .... | ரூ. | 251—00 |

ஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இனியகுரலில் எளிய நடையில் சமய தத்துவங்கள் தோத்திர சாத்திரங்கள் வேதாகம புராணங்கள் - இவற்றைப்பற்றித் தெளிவாக மக்கட்கிடையே அறிவித்து வளர்த்தவர்கள். பலகல்விநிலையங்களை நிறுவி வளர்த்தவர்கள். திருக்கோயில்களை அருட் பொலிவோடு வளர்த்தவர்கள். கயிலை முதல் கன்னியாகுமரிவரை பலமுறை யாத்திரை செய்தவர்கள். ஆதீன வரலாற்றில் பொற்காலம் கண்டவர்கள்.

1. இச்சிறுகதைப் போட்டி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் குருபூஜை நினைவாக அமைக்கப்படுகிறது. சிறுகதைப்போட்டிப் பரிசுகள் ஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் குருபூஜைத் திருநாளாகிய 17—10—1984 ஆம் தேதியன்று தருமபுரத்தில் வழங்கப்படும்.

2. போட்டிக்கான சிறுகதைகள் அனுப்பப்பட வேண்டிய கடைசி நாள் 30—9—84. அன்று மாலை 5 மணிக்குள் நமக்கு வந்து சேருமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமாக வந்து சேரும் கதை எதுவும போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது என்று எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

3 போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் ஸ்ரீகயிலைக் குருமணி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று உறையில் குறிப்பிட்டு, ஆசிரியர், ஞானசம்பந்தம், தருமை ஆதீனத் திங்கள் இதழ், ஞானசம்பந்தம் செயலகம், தருமபுர ஆதீனம், மயிலாடுதுறை 609 001, தஞ்சை மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பப் பெறல் வேண்டும்.

4. எழுத்தாளர்கள் எழுதியனுப்பும் சிறுகதைகள் அவர்களது சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். ஏற்கனவே வெளிவந்த கதையாகவோ, கதையைத் தழுவியதாகவோ கதையின் அடிப்படையைக்கொண்டதாகவோ இருத்தலாகாது.

என துசொந்தப்படைப்பேயாகும் எனஉறுதியாகக்கூறுகிறேன்" என ஓர் உறுதிமொழியுடன் அனுப்பப்பெறவேண்டும். அன்பு கூர்ந்து எழுத்தாளர்கள் இதனைமறவாது பின்பற்றவேண்டும்.

5. அனுப்பப் பெறும் சிறு கதைகள் "ஞானசம்பந்தம்" இதழில் ஆறு பக்கங்களில் அடங்கும் அளவிற்கு (டெமி 1×8) அளவில் இருத்தல் வேண்டும். தாளில் ஒரு பக்கம் மட்டுமே கதைகள் எழுதப்படல் வேண்டும். எழுத்துத் தெளிவாகவும் வாசிக்குமாறும் இருத்தல் வேண்டும.

6. சிறுகதையின் கருப்பொருள், மக்களிடையே இந்து சமயச்சிறப்பை,சைவசமயச்சார்பானதெய்வநம்பிக்கையையும் பக்தியையும் வளர்ப்பதாகவும், நல்லொழுக்கத்தையும், பண் பாட்டையும் ஊட்டுவதாகவும், ஆன்றோர் பின்பற்றி வாழ்ந்த அரும்பெரும் அறநெறிகளைக் கடைபிடிக்கத் தூண்டுவதாகவும் அமைதல் வேண்டும். இவற்றில் ஏதாவது ஓர் அம்சத்தை அழுத் தமாகவற்புறுத்தி எழுதினாலும் போதுமானது.

7. மூன்று பரிசுகள் வழங்கப்பட உள்ளன. முதல்பரிசு ரொக்கம்ரூ. 1001-ம்,இரண்டாவதுபரிசு ரூ. 501-ம்மூன்றாவதுபரிசு ரூ. 251 ம் அளிக்கப்படும். பரிசு பெறாத, தகுதியுள்ள கதைகள் பிரசுரத்துக்குஏற்றுக் கொள்ளப்படும்.

8. பரிசுக்கு உரிய சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பதில் தேர் வுக்குழுவின் தீர்ப்பே முடிவானது. இத்தேர்வுக் குழு, தருமை ஆதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் நியமனம் செய்யப்படும்.

9. சிறுகதைப் போட்டியில் பரிசுக்கு உரியதல்லாத கதை கள் எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பப் பெறமாட்டா. ஆகையால் எழுத்தாளர்கள் தங்கள் படைப்பின் ஒரு பிரதி வைத்துக் கொள்வது நலம்.

10. இச்சிறுகதைப் போட்டி சம்பந்தமாக எவ்விதமான கடிதப்போக்கு வரத்தும் வைத்துக் கொள்ள இயலாது.

**ஸ்ரீகயிலைக் குருமணி நினைவுச் சிறுகதைப் போட்டியில் தமிழ் எழுத்தாளர்கள் எவ்வித பேதமுமின்றி, ஆண் பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.**

**ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்**
**ஆணையின்வண்ணம்**

ஆசிரியர், ஞானசம்பந்தம் - தருமையாதீனத் திங்கள் இதழ்,
ஞானசம்பந்தம் அலுவலகம். தருமபுரம்,

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 43 | இரக்தாக்ஷி – ஆவணி – 10—9—84 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஞானவேள்விக்கு நன்கொடை நல்குவீர்!

### உயிருக்கு ஊதியம்:

உலகமக்கள் எதிலும் ஊதியம் கருதியே செயல்படுவது வழக்கம். மேனாட்டார் இதனைப்பயனுடைமைவாதம் (Utilitarianism) என்பர். வியாபாரத்தில் விருத்தியடைய நினைப்போர் இலாபத்தைக் கருதுவர். விவசாயத்தில் பயனடைய எண்ணுவோர் அறுவடையைக்கருதுவர். வாழும்வாழ்விலே உயிருக்கும் ஓர் ஊதியம் எதிர்பார்க்கப்படும். உயிரினுக்கு ஊதியம்எது என வள்ளுவப்பெருந்தகை வகுத்துரைப்பார். " உயிருக்கு ஊதியம், கொடுத்தலும் அதனால் புகழினைத் தொடுத்தலும் ஆகும். அஃது அன்றி உயிருக்கு ஓர் ஊதியம் வேறுகிடையாது "

" ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு "

ஆகவே இசைமை வேண்டின் ஈகை வேண்டும்; ஈகை புரியின் இசைமை மலரும் என்பது சித்தாந்தம் ஆகிறது.

### பலவகைத் தானங்கள்:

தானம் பலவகைப்படும். வைணவ சம்பிரதாயத்தில் "பகவத் காரியம் ", "பாகவதகாரியம்" என இருவகைத்தானங்

களைக்கூறுவர். பகவத்காரியம்என்பதுஐயம்எனவும்அழைக்கப்படும். இறைவன் வகையிலே ஈயப்படும் தானத்தைத்தான் அவர்கள் பகவத் காரியம் எனப்பகவர். அடியார்கட்காகச் செய்யப்படும் கொடை பாகவத காரியம் எனப்படும். இதனைப் பிச்சை எனவும் போற்றப்படும். "ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி" என்பது ஸ்ரீ ஆண்டாள் வாக்கு.

தாகம்என்று வந்தவருக்குத் தண்ணீர் தருவதுநீர்க்கொடை. கோடைக்காலத்திலும் திருவிழாக் காலங்களிலும் பலர் தண்ணீர்ப் பந்தல் அமைத்து இதனைச்செய்வது வழக்கம். தாகம் தீருமவரைத் தண்ணீர் தானம் சிறக்கும். அதுதீர்ந்தபின், அது மறக்கப்படும்.

அன்னதானம் அடுத்தது. பசிஎன்று வந்தவருக்கு அன்னம் பாலிப்பது - அன்னதானம் செய்வது விசேடம்தான். அதிலும் சிவன் அடியார்களுக்கு அன்னம் பாலிப்பது சிறப்புடையது - இதனைச் சைவமரபிலே மாகேசுரபூசை என மதித்துப் போற்றுகிறோம்.

" மண்ணி னில்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வரு " கென உரைப்பார்

எனச்சேக்கிழார்பெருமானர் இதனைச்சீர்மையுறவிதந்துகூறுவார். அன்னதானத்தின் நினைவும் பசிதீர்ந்ததும் பறந்துபோய்விடும் - மறந்தும்போய்விடும்.

அடுத்தது வஸ்திரதானம் - வறியவர்களுக்கு ஆடைவழங்குவதுதான் வஸ்திரதானம் எனப்படும். உணவு உயிரைக்காப்பது போல, உடை மானத்தைக் காக்கும் மாண்பு கொண்டது. ஆடையை உபயோகிக்கும்காலம்வரை வஸ்திரம்வழங்கினேரை வாழ்த்திப் பாராட்டுவர். வஸ்திரம் - அந்தத் துணி பழுதுபட்டு விட்டால்-கிழிந்துபோய்விட்டால் வஸ்திரதானத்தின் கீர்த்தியும் அத்தோடு கிழிந்து பட்டுப்போகும் தானே?

இன்னும் கன்னிகாதானம், பூதானம், சுவர்ணதானம் கோதானம் - இப்படித் தானங்கள் பலவகைகளை நாம் இவ்வுலகிலே பார்க்கிறோம்,

**உயர்ந்த தானம் :**

தானங்களில் உயர்ந்த தானம் - ஒப்புயர்வற்ற தானம் - அழியாது பரிமளிக்கும் அற்புததானம் ஒன்றுஉண்டு. அதுதான் ஞானதானம் எனப்படும். இதனையே "ஞானவேள்வி" என்று ஞானியர் கூறுவர்.

எந்த தானத்தையும் எவரும் காலக்கிரமத்தில் மறந்து விடுவர் – ஆனால் ஆன்ம ஞானத்தைத் தந்த ஆண்டவனை நிகர்த்த குருபிரானை – குருமூர்த்தியை ஆன்மீக வளர்ச்சியிலே அருள் அமுதை வழங்கிய ஆசானை – " அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல் அறிவை " ஊட்டிய நாயகனை எவர்தாம் மறப்பர்?

## சைவமரபு தெய்வமரபு :

நமது சைவமரபு தெய்வமரபு. குருபிரானாக வருபவர் சிவபிரானே என்பது சிவநெறி மரபாகும். குருவருள் இருந்தால் அன்றித் திருவருள் கூடல் அரிதினுமரிது என்பது சைவ நூல்களின் மெய்வகைத்துணிபு. சைவ சித்தாந்தம் உய்வதற்குற்ற உயர் குறிக்கோளைக் காட்டவல்லது என நம்மவரே அன்றி மேனாட்டு மேதைகளும் பாராட்டுகின்றனர். கிறித்தவநெறியைக் கீழை நாடுகளில் பரப்பவந்த ஜி. யு. போப் மகத்தான முறையிலே சைவசமயம்பற்றி மதிப்பீடு செய்கிறார்: " ஐயமின்றிச் சைவசமயம் இந்தியாவின் எல்லாச் சமயங்களினும் உண்மையில் மிகமிக மதிப்புடையதாகும். அது தனிச்சிறப்பான முறையில் தென் இந்திய மரபைச் சார்ந்தது–அது தமிழ்ச்சமயம் எனக் கூறத்தகும் " என்பது அந்தக் கிறித்துவப் பாதிரியாரின் அரிய தீர்ப்பு.

## தருமையாதீனப்பணி :

தருமையாதீனம் தனிப் பெரும் முறையிலே கடந்த ஐந்து நூற்றாண்டுக்காலமாகச் சைவசமயப்பணியைச்சீரியமுறையிலே இயற்றிவருகிறது. எண்ணூற்றுக்கு மேற்பட்டநூல்கள் தருமையாதீனத்தால் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. திருமுறை நூல்களைத் திறம்படுமுறையிலே உரைக்குறிப்போடு – உயரிய முறையிலே பதிப்பித்தபெருமை தருமைஆதீனத்திற்கு உண்டு. இவ்வாதீனத் தொண்டின் வரலாறு தொடர்ந்து மிளிர்ந்துவருகிறது. 25–ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் ஆட்சிக்காலம் நற்காரியம் பலப்பல இயற்றப்பட்ட காரணத்தால் பொற்காலம் எனத் தகுவதாகும்.

## கருத்தரங்கமும் ஆய்வுமையமும் :

வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரிய 26–ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மரபை விடாது மகத்தான தொண்டுகள் இயற்றிவருகிறார்கள். அவர் தம் திருத்தொண்டின் சிகரமாக விளங்குவது அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கம் நடத்தியதும் அனைத்துலக சைவசிந்தாந்தபண்பாட்டு ஆய்வுமையம் ( International Institute of Saiva Sidhanta and

Cultural Research) தோற்றுவித்ததுமாகும். கருத்தரங்கில் உலகு எங்கணும் இருந்து பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். சைவ இலக்கியக் களஞ்சியம் பெருகுமாறும், சைவ சித்தாந்தம், ஒப்பீட்டு ஆய்வுமுறைஎன்றபுதியபாதையில்புகவும் கருத்தரங்கம்உதவியது உலகு அறியும். இத்தகையசீரியசெயல்களால் குருமகாசந்நிதானம் அவர்களைப் பல பெருமக்கள் பாராட்டிப் போற்றி வருகின்றனர்.

அனைத்துலக சைவ சித்தாந்த பண்பாட்டு ஆய்வு மையம், ஆதீனத்தின் சீரியஉயரிய சிறப்புசால்பணி ஆகும். இப்பணிக்கு நிலை நிதிவைப்பாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், குறைந்த பட்சம் ரூபாய் இருபதுலட்சம் திரட்டத்திட்டமிட்டுள்ளார்கள். தயையும்பரிவும்கொண்டு தாமே ரூபாய் பத்துலட்சம் வழங்குவதாகத் திருவுளம் கொண்டு முதல் தவணையாக ஐந்து லட்சம் ரூபாய் அருள் கூர்ந்து வழங்கியுள்ளார்கள். இந்த முயற்சியை குருமகாசந்நிதானத்தில் வாழ்நாட்பணியாக (life work) முன்வந்து ஏற்றுள்ளமைக்குச் சைவப் பெருமக்கள், ஏன் தமிழ் உலகு முழுதுமே மிகவும் கடமைப்பட்டிருக்கிறது என்றுகூறவும்வேண்டுமோ? இப்பணிக்குநன்கொடைவழங்கிய பெருமக்கள் விவரம் இவ்விதழில் பிறிதொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## நிதியுடையோர் நினைவுக்கு...

வள்ளன்மை கொண்டோரும் வாழ்வில் செல்வவளம் மிக்கோரும் இவ்வாய்ப்பை கிடைத்தற்கு அரிய வாய்ப்பாகக் கருதிப் பயன் படுத்திக்கொள்ளலாம். உலக அரங்கில் சைவத்திற்கு உயர்வு காண முயலும் இவ்வுன்னத முயற்சியில்— இந்த ஞானமா வேள்வியில்— அவர்களும் பங்கு பெற்றுத் தத்தம் பங்கைச் செலுத்த முன்வரலாம். பொருளின் நிலையாத தன்மையையும் அருளின் மெய்ந்நிலைத் தன்மையையும் சற்றுச் சிந்தித்தால் போதும்! தாம்தேடிச் சம்பாதித்த பொருளை, தக்க தருணம்வந்தது என்றுமகிழ்ந்து தந்துதவ முன்வருவார்களாக! மக்கள் ஆர்வம் கொண்டால் மடை திறந்தாற்போல் இலட்சக்கணக்கில் என்ன? கோடிக்கணக்கில் கூட பொருள் வெள்ளம் பொங்கி எழுந்து பொழியும் அன்றோ? "அருள்" கடைக்கண் பார்வை அமைந்து விடும் என்றால், பொருள் குறைவின்றிப் பொருந்தச்சேராதா? நிதியுடையோர் தங்கள் பங்கை நிறைமனம் கொண்டு வழங்குவார்களாக!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து தருமையாதீனத்திற்கு வந்திருந்த

பக்தி இலக்கியக் கருத்தரங்கக் குழுவினர்க்கு

வழங்கியருளிய

# ஆசியுரை

28—7—84

"அன்புமிக உண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
துன்ப வினையைத் துடைப்பதுண்டாய் — இன்பப
தரும்பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
வரும் காரணர்க்குண்மை வை"

**புனிதமான நாள் :**

இன்றையதினம், அப்பர் சுவாமிகளும் நம் கயிலைக் குருமணி அவர்களும் திருக்கயிலாய நாதரைத் தரிசித்த புனிதமான நாள். ஆடி அமாவாசையன்று தான், அப்பர் சுவாமிகள் இறையருளால், திருவையாற்றில் கயிலாயநாதனைத் தரிசித்தார்கள். எதிர்பாராத விதத்தில் இறையருளால் அதே ஆடி அமாவாசையன்று, நம் கயிலைக்குருமணி அவர்களும் 1959 – ஆம் ஆண்டு திருக்கயிலாய நாதரைத் திபெத் நாட்டிலுள்ள கயிலைமலையில் தரிசித்தார்கள். அந்த ஆண்டு முதல் இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தப்புனிதநினைவுநாளை ஆடி அமாவாசையன்று இங்குக் கொண்டாடி வருகின்றோம். அந்நினைவாகத் 'திருக்கயிலாய நாதர் தரிசன நினைவு வளைவு' ஒன்றும் இங்கே அமைக்கப் பெற்றுள்ளது. இத்தகைய புனிதமான நாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பக்தி இலக்கியக் கருத்தரங்கக் குழுவினர் இங்கு வந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

**தருமம் வளர்க்கும் தருமபுரம் :**

இங்கே பலரும் பலவிதமான பக்திப் பண்பாட்டுக் கருத்துக்களைக் குறித்துப் பேசினீர்கள். ஒருவர் பேசும்பொழுது " தருமம் வளர்க்கும் தருமபுரம் " என்று பேசினர். இத்தொடர் சிந்திக்கத்தக்கதாகும். இப்பொழுது சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் நம் ஆதீனத்தின் சார்பில் இரு நூல்கள் வெளியிடப்பெற்றன. ஆதீனக் குருமுதல்வர் பற்றிய வரலாற்றுநூலை ஆங்கிலத்திலும், அவரால் தோற்றுவிக்கப்பெற்ற ஆதீனவரலாறு பற்றியநூலைத் தமிழிலும் வெளியிட்டோம். அங்ஙனம் வெளியிடப்பெற்ற தமிழ் நூலுக்குத் 'தமிழ் வளர்க்கும் தருமபுரம் " என்று பெயர் அமைந்துள்ளது. இத்தொடர் பற்றியவிளக்கம் அந்நூலின் ஆசியுரையிலும் குறிக்கப்பட்டுள்ளது. ஈண்டும் சிந்திக்கலாம். இத்தொடரைப் பற்றி மேம்போக்காக இரண்டாம் வேற்றுமையாகக் கொண்டால் தமிழைத் தருமபுர ஆதீனம் வளர்க்கிறது என்று பொருள் காண்பர். சிறிது சிந்தித்து இயல்பாக உள்ள முதல் வேற்றுமையாகக் கொண்டால் தமிழ், தருமபுர ஆதீனத்தை வளர்க்கிறது என்று பொருள் தரும். இரண்டுமே உண்மைதான். அதே போன்று "தருமம் வளர்க்கும் தருமபுரம்" என்றால் தருமத்தைத் தருமபுர ஆதீனம் வளர்க்கிறது என்பதும் அத்தருமம், தருமை ஆதீனத்தை வளர்க்கிறது என்பதும் உண்மையாகும். எவன் தருமத்தை வளர்கிறானே அவனைத் தருமம் வளர்க்கும் என்பது தத்துவ உண்மை. இதனை "தர்மோ ரட்சித ரட்சதிகா;" என்று வடமொழியில் கூறுவர், தர்மம் தலைகாக்கும் என்பது தமிழ்ப் பழமொழி. இதனால் எவன் ஒருவன் தருமத்தை வளர்க்கவில்லையோ அவனை அந்தத்தருமமே அழித்துவிடும் என்பதையும் புரிந்து கொள்ளுதல்வேண்டும். இக்கருத்தில்தான் திருவள்ளுவரும், "அன்பிலதனை அறம், என்பிலதனை வெயில்போலக்காயும்" என்று கூறுகின்றார். இக்கருத்தை உலகியல்நிலையில் இணைத்துப் பார்க்கலாம். ஒவ்வொருவரும் அவரவர்கள் கடமையைச் சரிவரச் செய்தால் அதுவே அவர்களுக்குப் பொருளையும் புகழையும் உயர்வையும் தரும். அதனால்தான் பகவத்கீதை " கடமையைச் செய் " என்று கட்டளையிடுகிறது.

" கர்மண் ஏவ அதிகாரஸ்தே மாபலேஷுகதா சன "

என்பது பகவத்கீதை. " கடமையைச் செய்யத்தான் உனக்கு அதிகாரம். பலனை அதாவது உரிமையைக் கேட்க உனக்கு அத்காரமில்லை" என்பதே அவ்வாக்கியத்தின்பொருள். இருப்பி... செய்வோர்க்கு உரிமை தானேவரும். கடவுள்

அதனைக் கொடுத்தே தீர்வார். மறுக்கமாட்டார் என்பதுகருத்து. கீதை ஐந்தாம் வேதமாகக் கருதப்படுவதால் அது கட்டளையிடுகிறது.

### ஒருவர் கடமை பிறிதொருவருக்குரிமை :

அக்கருத்தையே அப்பர் சுவாமிகள் சாதாரண மனிதனுக்கும் புரியும் வகையில் உன்கடமையை நீ தவருதுசெய்தால் இறைவன் அவர் கடமையை எப்போதும் தவருது செய்து வருவார்; எனவே அவர் கடமை உனக்கு உரிமையாகிறது. உன்கடமை அவருக்கு உரிமையாகிறது. அதேபோல் உலகில் அரசின்கடமை மக்கட்கு உரிமையாகிறது. மக்கட்கடமை அரசிற்குஉரிமையாகிறது. முதலாளியின்கடமைதொழிலாளிக்கு உரிமையாகிறது. தொழிலாளியின்கடமை முதலாளிக்கு உரிமையாகிறது. பெற்ருேர் கடமை பிள்ளைகட்கு உரிமையாகிறது. பிள்ளைகளின் கடமை பெற்ருேர்க்கு உரிமையாகிறது. ஆசிரியர் கடமை மாணவர்கட்கு உரிமையாகிறது. மாணவர்களின் கடமை ஆசிரியர்கட்கு உரிமையாகிறது. கணவன் கடமை மனைவிக்கு உரிமையாகிறது. மனைவியின் கடமை கணவனுக்கு உரிமையாகிறது. எனவே அவரவரும் கடமையைச் சரியாகச் செய்தால் உரிமைஎன்ற சொல்லுக்கேஇடமில்லை. இதனுல்தான் கீதை பலனைக்கேட்க உரிமை இல்லை என்று கூறியது. அப்பர் சுவாமிகள் எல்லோருக்கும் புரியுமாறு எளிமைப்படுத்தி "தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கடமை என்ற ஒரே சொல்லால் இருதிறத்தார்க்கும் உரிய உரிமை கிடைக்கிறது என்றருளினுர்.

இக்காலத்தில் கடமையை மறந்து உரிமையை மட்டுமே நினைந்து உரிமைக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். அதனுல்தான் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரியாகச் செய்தால் உரிமைகள் தாமே வந்தடையும் என்பதை வலியுறுத்த வேண்டுவது அவசியமாகிறது. ஒருவர் கடமை மற்ருெருவருக்கு உரிமையாகும். உண்மையைப் பலரும் இன்றும் புரிந்துகொள்ளாமலிருப்பதும் ஒரு விந்தையே. கடமையைச் சரிவரச் செய்தலே தர்மமாகும். அந்ததர்மமே அவர்களைக் காக்கும் என்பதில் ஒருசிறிதும் ஐயமில்லை.

### முரண்? இல்லை :

இருமாதங்களுக்கு முன்பு இங்கே அகில உலக சித்தாந்தக் கருந்தரங்கம் நிகழ்ந்தது. இப்பொழுது அண்ணுமலைப்பல்கலைக் கழகத்தில் பக்தி இலக்கியக் கருத்தரங்கம் நிகழ்கிறது. பக்தியை

வளர்க்கும் நிறுவனமாகிய ஆதீனம், அறிவு நிலையில் சாத்திரக் கருத்தரங்கம் நிகழ்த்தியதும், அறிவை வளர்க்கும் கலைக்கூட மாகிய பல்கலைக்கழகம், பக்தி இலக்கியக் கருத்தரங்கம்நிகழ்த்து வதும் முரண் போலத் தோன்றும். ஆனால் முரணில்லை. என் னெனில் பக்திக்கு அறிவு அடிப்படையானதே. காரணகாரிய இயைபுடைய பக்தியே நிலைத்து நிற்கும். அறிவொடு படாத பக்தி நிலையாது. அறிவையை விவேகம் என்பர்.

## அன்பும் அறிவும் :

அன்பாகிய பக்தியும் வேண்டும்; அறிவாகிய ஞானமும் வேண்டும் இதனால்தான் நம் ஆதீனக்குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தர், ஞானதாகம் கொண்டு ஓடிவருவோனுக்கு அன்பும் வேண்டும்; அதிலே விவேகமும் வேண்டும் என்றருளுகின்றார் விவேகம் என்பது காரணகாரிய இயைபறிவாகும். இத்தகைய அன்பராகுங்காலத்து ஏற்படும் துன்பங்களைக் கண்டு துவளாத பக்திவைராக்கிய முடையவனாகவும், இன்பம் தரும் பரிபூரண னாகிய இறைவனிடம் மென்மேலும் ஆர்வமும் வேட்கையும் உண்மைப் பொருளை நாடித் தேடி ஓடி வருவான், எவனோ அவனுக்குச் சாத்திரப் பொருளைக் கூறுக என்று ஆதிகுருமுதல் வர் அருளுகின்றார். எனவே பக்தி என்பது அறிவு அடிப்படை யன்றி மேலோட்டமாக இருத்தல் கூடாது. ஆழமாகக் குங்குலியக்கலயர், தாடகை முதலியோரைப் போன்றும் கண்ணப்பரைப் போன்றும், விவேகவைராக்கியத்துடன் இருத் தல் வேண்டும். இன்று பலரிடமும் பக்தியின் நிழலைத்தான் காண முடிகிறது. நிழலைக்கண்டு ஏமாறுதல்கூடாது. இத்தகையவைராக் கியமான பக்தி நெறியை வளர்க்கும் நிறுவனங்களே ஆதீனத் திருமடங்களாகும்.

## கலைவளர்க்கும் கலைக்கூடம்:

அடுத்துக்கலைத்துறையைப்பற்றிச் சிந்தித்தல் நலம்பயக்கும். பக்தித்துறையை ஆதீனங்கள் வளர்ப்பது போலக் கலைத்துறை யைப் பல்கலைக் கழகங்கள் வளர்கின்றன. கலைஞானமும் மெய் ஞானத்திற்கு அடிப்படையேயாகும். கலைஞானம் என்பது உலகியல் அறிவாகும். மெய்ஞானம் என்பது கடவுளியல் அறிவாகும். ஞானப்பால் அருந்தியமாத்திரத்தில் இவ்விரண்டை யுமே பெற்றார் திருஞானசம்பந்தர் என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் அருளுகின்றார். "சிவனடியே சிந்திக்கும்........" என்று தொடங்கும் பாடலில் கலைஞானமும் மெய்ஞானமும்

விளக்கப்படுகின்றன. சிவனடியைச் சிந்திக்கவைக்கும் சிறப்பு கலைஞானத்திற்குண்டு; பவமதனை (பவம்-பிறப்பு) அறமாற்றும் சிறப்பு மெய்ஞானத்திற்குண்டு என்று தெளிவித்தருளுகின்றார் சேக்கிழார்.

இவ்விரண்டையும் உடையவரே "ஞானி" எனப்படுவர்; பேரறிஞர் என்றும் போற்றப்படுவர். அத்தகைய ஞானியாகத் திருஞானசம்பந்தர் திகழ்ந்தார் என்பது சேக்கிழாரின் குறிப்பு.

## ஆசிரியர் இருவர் :

கலைஞானத்தை வளர்க்கும் கலைக் கூடத்திலிருந்து பேராசிரியர்கள் அறுபதின்மர் இங்கு வந்துள்ளீர்கள். கலைஞானத்தைப் போதிக்கின்ற உங்களையும் ஆசிரியர்கள் என்றேகுறிப்பர். மெய்ஞ் ஞானத்தை அருளும் அருளாளர்களையும் ஆசிரியர்கள் என்றே குறிப்பர். என்னவேறுபாடு என்பது இங்கே சிந்திக்க வேண்டியது அவசியமாகும், கலைஞானம் மெய்ஞ்ஞானத்திற்கு அடிப்படையானது, கலைஞானமின்றிமெய்ஞ்ஞானம்கைகூடாது. இதனால்தான் "கலைமலிந்தசீர் நம்பிகண்ணப்பர்" என்று அன்பு பிழம்பாய்த் திகழ்ந்த கண்ணப்பரைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டார். கலைஞானத்தை உவமையிலாக் கலைஞானம் என்று சிறப்பித்த சேக்கிழார் மெய்ஞ்ஞானத்தை உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்று அதன்மேன்மையைச் சிறப்பித்துள்ளார். மேலும் சண்டீசர் புராணத்தில்,

" அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடுங்கழலே எனக் [தொண்ட
செலவுமிகுந்த சிந்தையினில் தெளிந்தார் சிறிய பெருந் [தகையார் "

என்று கலைஞானத்தின் முடிவில் மெய்ஞ்ஞானம் சித்திப்பதைத் தெளிந்தார் சிறிய பெருந்தகையாகிய சண்டீசர் எனக்காட்டியிருப்பது இதனை நன்கு தெளிவிக்கும்.

" கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் "

என்ற வள்ளுவரும் கருவிநூல்களால் வளரும் கலைஞானத்தின் பயன், மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடராகிய ஆடுங் கழலைத் தொழுதலே என்றருளிப் போந்தார். எனவே கலைஞானத்தைப் போதிப்போர் வித்யாகுரு என்றும், மெய்ஞ்ஞானத்தை உபதேசிப்போர் ஞானகுரு என்றும் போற்றப் பெறுகின்றனர். கலைஞானம் ஆதாரமாயிருப்பது.மெய்ஞ்ஞானம் ஆதேயமாயிருப்பது.

**ஒன்று பலவாதல் :**

இன்று இங்கு வந்துள்ளோர் தாய்மொழியாகிய தமிழிலும் சேய் மொழிகளாகிய கன்னடம், தெலுங்கு மலையாளமாகிய மொழிகளிலும் பக்தி இலக்கியங்கள் குறித்து ஆய்வு செய்வோராக உள்ளீர்கள். தமிழ் தாய்மொழி என்பதிலும், பிற தென்னிந்திய மொழிகள் அதன் சேய் மொழிகள் என்பதிலும் கருத்து வேறுபாடுகளைக் காணலாம். எனினும் ஒருகாலத்தில் அரசியல் கட்சி ஒன்றாகத் தோன்றி இருந்து, இன்று, அதுவே அதன் தொண்டர்களால் பலவாகப் பிரிந்து காணப்படுதல் போல மொழியும் ஒருகாலத்தில் ஒன்றாக இருந்து, பின், அது. பேசுவோரால் பிரிக்கப்பட்டது என்பதே வரலாற்று உண்மை. அந்த அளவு பிரிவுகள் சமயத்தில் இல்லை. எனினும் ஒரு காலத்தில் வைணவம் சைவத்தில் இணைந்திருந்ததே; பிற்காலத்தில் பிரிந்தது என்பதையும் வரலாற்றில் காணலாம். வைணவத்திற்குள்ளே கூட அதன் தொண்டர்களால் இன்று பல பிரிவுகள் ஏற்பட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது! இது காலநிலை! எனவே மொழியிலும் சமயத்திலும் அரசியலிலும காலநிலையில்பிரிவுகள் உண்டாவதைத் தவிர்க்க முடியாது; அங்ஙனமே தமிழிலிருந்து பிரிந்து சென்ற தெலுங்கு, கன்னடம், மலையாளமும்மற்றும் இந்தி மொழிகளில் காணும் பக்தி இலக்கியங்கள் குறித்து அண்ணாமலைபல்கலைக்கழகம் கருத்தரங்கம் நிகழ்த்துவது மகிழ்ச்சிக்குரியது. இதுபோன்ற கருத்தரங்கங்களினால் ஆஸ்திக மக்களிடையேயுள்ள வேற்றுமைகள் குறையும்; பல்வேறு ஐயங்கள் இன்றுள்ள இளைஞர்களின் மனத்திலே உள்ளன – அவை இக் கருத்தரங்கத்தினால் தீர்க்கப் பெறும்; சமயக்கருத்துக்களில் தெளிவு பிறக்கும். இதனால் நாஸ்திகம் மெல்லமெல்ல மறையும்.

**வாழ்த்து :**

இந்தக் கருத்தரங்கத்தைச் சிறப்புற நடத்திவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் அன்பர் திரு. ஆறு. அழகப்பன் அவர்களும் மற்றும் இந்தியப் பெருநாட்டின் பல மாநிலங்களிலும் உள்ள பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த சமய இலக்கியப் பேரறிஞர்களும் மேற்கொண்டுள்ள இம்முயற்சி மேலும் சிறந்து வளர்வதாக! இதுபோன்ற கருத்தரங்குகள் நாடெங்கிலும் நடந்து இவர்களின் மனத்திலே சமயத் தெளிவும் பக்தியும் வளர்ந்தோங்குவதாக! அரசியல்வாதிகளும் ஆன்மீகவாதிகளும் மற்றும் பிறதுறை அறிஞர்களும் தங்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்து அதன்வழி தானேவரும் உரிமைகளைப் பெற்றுச் சிறப்பார்களாக!

இக்கருத்தரங்கம் நலமுற நிறைவுறவும் அன்பர்களும் அறிஞர்களும் நலம்பல பெற்று நீடுவாழவும் மக்கள் பக்தியும் ஞானமும்கொண்டு பண்பாட்டுடன் திகழவும் எல்லாம்வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க பக்தி ! வளர்க ஞானம் !!

---

**கடிதம்:**

அன்புக்கடல் - திருப்பூங்குடி
**வி. வி. கே. ஆறுமுகம்**
ஆசிரியர்
சிவன்கோவிலடி, 12/1,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம் (இலங்கை).

இயக்குநர்:
வைத்தீஸ்வரர் வில்லிசைக்குழு
லண்டன்
1—9—1984

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது பொன்னார் திருவடிக்கமலங்களை வணங்கி அடியேன் ஆறுமுகம் எழுதுவது. ஞானத்தின் திருவுருவைக் கண்ணாரக் கண்டு மகிழ, நான் மறையின் இரதமாகிய சித்தாந்தச்செந்தமிழை மாந்தித் திளைக்க விழைந்தேன். என் அருமைப் புதல்வியின் அழைப்பின் பேரில் லண்டன் வந்துவிட்டேன். "ஞானசம்பந்தம்" இதழில் வரும் பெரியபுராணக் கதையின் கருவூலங்கள் நினைக்க நினைக்க இன்பம்பெருகுகின்றது. திருக்கைலாய பரம்பரையில் வந்துதித்த சிந்தாமணியாகத் திகழ்கின்றீர்கள். தமிழ்வாழ்க! சைவம்வாழ்க!

என்றும் உங்கள் திருவடிக்கன்பன்
**வி. வி. கே. ஆறுமுகம்.**

---

தருமையாதீனம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம்.

## பத்தாம் வகுப்பில் 86 % வெற்றி

மேற்படி பள்ளியில் 1983–84 ஆம் ஆண்டு பத்தாம்வகுப்பில் தேர்வு எழுதிய மாணவ மாணவியர் எண்ணிக்கை 49. தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை 42. 86 விழுக்காடு வெற்றி பெற்றுள்ளனர். அறிவியல் பாடத்தில் அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு மேலும் அதிக அளவில் தேர்ச்சி விழுக்காடு பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம்
கயிலைமாமுனிவர்
காசிவாசி ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்சுவாமிகள்
அவர்கள்
அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கில்
நிகழ்த்திய

# வரவேற்புரை

எல்லாம் வல்ல சொக்கலிங்கப் பெருமானின் திருவருளையும் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பேரருட்பெருங்கருணையையும் உளங்கொண்டு இப்பணியைத் தொடங்குகிறேன்.

சித்திதரு நாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப்ர காசன் உண்மை
தருநாதன் நங்குருநா தன்.

என்பது நம் தருமையாதீன ஆதிபரமாசாரிய குருமூர்த்திகளாகிய குருஞானசம்பந்தரின் திருவாக்காகும். அவர்கள் அருளியவாறு நம் குருநாதன் உண்மை தருநாதனுக விளங்கி அருளுவது நமக்கெல்லாம் பேருவகை தருகிறது. ஞானியர்கள் தாம்பெற்ற இன்பம் இவ்வுலகமும் பெறவேண்டும் எனும் கருணையால் மன்னுயிர்கட்குப் பல உண்மைகளை வழங்கியுள்ளார்கள் அத்தகைய பேருண்மைகளை அறிதற்கும், ஆராய்ந்து தெளிதற்கும் ஏற்றதாக இந்நாள் அமைந்துள்ளது. நம் வாழ்நாளில் எத்துணையோ நாட்கள் வழுக்கினுள் வைக்கும் நாளாகவும், கொன்னே கழியும் நாளாகவும் அமைந்துவிடுகின்றன. அவ்வாருன நாட்கள், நம் பிறவி வெப்பத்தில்வெதும்பி வருந்தும் நாட்களாகவும், மேலும் அப்பிறவி வெப்பத்துக்கு வித்தாகும் நாட்களாகவும் அமைந்தனவாகும். அவ்வாறு அனுபவித்த பிறவி வெப்பம் நீங்க இந்நாள், இறையடி நிழல்தரும் இன்பத்தைத் தலைப்படுத்தற்குரிய நாளாக விளங்குகின்றது. நிழலருமை வெயிலில் இருந்தவர்க்குத்தானே புலனுகும். இந்நிலையில்தான் நமக்குத் 'தண்ணிழலாம் பதி' எனச் சந்தான குரவரும், ஈசன் எந்தை இணையடி நீழல் மாசில் வீணையாய் மாலை மதியமாய்

வீசு தென்றலாய் வீங்கிளவேனிலாய் மூசு வண்டு அறை பொய்கையாய்ப் பொலிந்திருந்தது எனச் சமயகுரவரும் அருளிய உண்மை நினைவுக்குவரும். அதன் அருமையைநினைய நெஞ்சம் குழைகிறது. எனவே இந்நாள், ஏன் இன்றுமுதல் தொடர்ந்திருக்கும் மூன்று நாட்கள், அம்மூன்று நாட்கள் மட்டுமல்ல; அதன் பின்னும் தொடர்ந்து துய்க்கத்தகும் பொன்னாட்கள் பலவும் நன்னாட்களாம். இத்தகைய அரிய நாட்களைப் பயனுடைய நாட்களை வழங்கியிருக்கும் திருவருளையும், நம் தருமையாதீனத்து 26 ஆவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும் முதற்கண் வணங்கி மகிழ்கிறேன்.

மக்கள் வாழ்வாங்கு வாழவும் அதன்வழி இறையுணர்வு பெற்று ஈறில் இன்பம் பெறவும் வாய்த்ததொரு கருவியே சமயமாகும். இச்சமய நெறியைப் 'பொய் தீர் ஒழுக்க நெறி' எனக் குறிப்பர் திருவள்ளுவர். இந்நெறி பொய்மையற்றது என்பது மட்டுமன்று; பொய்மையினின்று நீங்கவும் மெய்ம்மையை அடையவும் உறுதுணையாக நிற்கின்றது என்பது இதனால் புலனாகின்றது. இந்நெறி இறைவனையே முதன்மையாகக் கொண்டு, அவன் உணர்த்த வழிவழியாக உணர்ந்த அருளாளர்களின் மரபுவழி வளர்ந்த பெருமையுடையதாகும். ஆதலால் தான் திருவள்ளுவர் அப்பொய்தீர் ஒழுக்கநெறி பொறிவாயில் ஐந்தவித்தானால் அருளப்பெற்ற தென்றும் கூறியருளினார். அவ்வாறாய மரபு நெறியே இன்று நாம் திருக்கயிலாய பரம்பரை என்று எண்ணுதற்கு ஏதுவாய் உள்ளது.

இத்தகைய சீரிய மரபு நெறியமைந்த சைவ சித்தாந்தச் செந்நெறி தலைமையும் தொன்மையும் உடையதாகும். இறைவனையே முதன்மையாகக் கொண்டு இப்பெருநெறி வளர்ந்துள்ளமையின் அதன் தொன்மை நன்கு விளங்கும், அன்றியும் இற்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் அரியநூல்களும் அகழ்வு ஆராய்வுகளும் இதற்கரணாகின்றன. இச்செந்நெறி அவ்வக் காலத்தும்பின்னும் வளர்ந்துவந்திருக்கும் சமயங்களையெல்லாம் அவ்வப் படிநிலையில் வைத்துக்காணும் தகைமையது. இதனால் இதன் சிறப்பு விளங்கும். இப்பெற்றியால்தான் அருளாளர்கள் 'இராசாங்க சமயம்' என்றும், 'திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தம்' என்றும் அருளுவாராயினர்.

இப்பெரு நெறியில் கூறப் பெற்றிருக்கும் உண்மைகள் வாழ்வாங்கு வாழுவதற்கும் வாழ்வின் பயனாய குறிக்கோளை எய்துதற்கும் துணையாவனவாம்.

" ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கில்லாத் தவம்தானங்கள்வந்தித்தல் வணங்கல்வாய்மை
அழுக்கில்லாத் துறவு அடக்கம் அறிவொ டர்ச்சித்த லாதி
இழுக்கிலா அறங்க ளானல் இரங்குவான் பணி யறங்கள். "

என்னும் சித்தியார். இவ்வாறுவாழ்ந்தால்மட்டும் போதியதன்று; வாழ்வின் பயனை குறிக்கோளை அடைதலும் வேண்டும்.

" மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக அன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனை அர்ச்சிப்பர்
ஊன் எடுத்துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ "

" மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர்கையிற் கொண்டங்கு இச்சித்ததெய்வம் போற்றி
சினமுத லகற்றி வாழும் செயலற மானல் யார்க்கும்
முனமொருதெய்வமெங்கும் செயற்குமுன் னிலையாமன்றே."

எனவரும் பாடல்கள் வாழ்வின் பயனை உணர்த்துவனவாம். நன்ருகவாழவும் வாழ்வின்பயனை அடையவும்தெரிந்துகொண்ட பின் அதற்கு நாம் தகுதியுடையோமா என்ற எண்ணம் எழும். அவ்வாருன தகுதி உயிர்க்கே உண்டு என நமது செந்நெறி விளக்கம் தருகின்றது.

" யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சச்சே அறியாது அசத்தில தறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா "

என்னும் சிவஞானபோதம்.

எனவே பொய்மையைப் பொய்மை என்று உணர்ந்து அகலவும், மெய்மையை மெய்மை என்று உணர்ந்து அணுகவும் தகுதி வாய்ந்தது உயிரேயாகும் என்பது விளங்குகின்றது. இவ்வாறு படிப்படியாகவும் பயனுடையதாகவும் உயிர்தம்வாழ்நாளை உயர்வுடையதாக்கி நிறைவுகொளச் செய்வது நம் சமயநெறி ஆகும்.

இத்தகைய அரியநெறியை நமக்கு உணர்த்தியிருக்கும் திறனும் நாம் அறிதற்குரியதாகும். ஒருவர் கூறக்கேட்டஅளவில் எதனையும் ஏற்றுக் கொள்வது உயிரது இயல்பன்று. கேட்டவற்றை ஆராய்தலும் ஆராய்ந்தபின் தெளிதலும் தெளிந்தபின் அதன்கண் தலைப்படுதலுமே உயிரது இயல்பாகும். ஆதலால் தான் திருவள்ளுவரும் அருள்தான் சிறப்புடையது எனக்

கூறிய அளவில் அமையாது அதனை ஆய்ந்து தெளிந்து பின் அதனை உளம்கொள்க என்றனர்.

> " நல்லாற்றான் நாடி அருளாள்க ; பல்லாற்றான்
> தேரினும் அஃதே துணை "

என்னும் திருக்குறள். இதைப் போன்றே சித்தாந்தச் செந்நெறியை விளக்கும் மெய்கண்ட நூல்களுள் ஒன்றானசிவஞான சித்தியாரிலும் அளவைகளைப்பற்றிய குறிப்புக்காணப்படுகிறது. அதன் கண் காண்டல், கருதல், உரை, உவமை, பாரிசேடம் முதலிய அளவைகள் விளக்கப் பெறுகின்றன. அவை மெய்ப் பொருளை ஆராய்ந்தறிதற்கு ஏற்றனவாகவுள்ளன. எனவே அவரவரும் ஆய்ந்து தெளிந்த பின்னரே எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ள இயலும்என்பது புலனாகிறது. இவ்வுண்மையை உளங்கொண்டே நம் குருமகாசந்நிதானம் அவர்கள் சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகத்திகழும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை இணைத்துச் சிறப்பும் உறைப்பும் உடைய ஆய்வு நிறுவனத்தைத்தோற்றுவித்ததற்கு ஏதுவாகஇக்கருத்தரங்கினைக் கூட்டியுள்ளார்கள்.

> " நின்றவூர்ப் பூசலன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
> நன்றுநீ டாலயத்து நாளைநாம் புகுதும். "

என்று இறைவன் அருளியவாறு போலத்தொடங்க இருக்கும் சைவசித்தாந்த ஆய்வுநிறுவனம் நம் குருமகாசந்நிதானம் அவர்கள் நம்மாட்டுவைத்த அருளினால்நெடிதுநாள் நினைந்துதொடங்கியிருக்கும் சிறப்புடையதாகும். அத்தகையஉயரிய ஆய்வு நிறுவனத்திற்கு கால்கோள் விழாவாக அமையும் இக்கருத்தரங்கில் பூசலார் செய்த ஆலயத்துள், இறைவன் நாளை நாம் புகுதும்என்று அருளினன், அப்பெருமான்|வேகம்கெடுத்தாளும் வேந்தனைகலின் மறுநாள் புகத்திருவுளம் கொண்டனன்; உயிர்களாகிய நாம் சற்றுப் பரபரப்புடையவர்கள்; அன்றியும் பயன் பெறுவதில் பெரு வேட்கையுடையவர்கள், ஆதலின் நாம் இன்றே புகுவோம்; இன்றே புகுவோம்.

இன்று முதல் மூன்று நாட்கள் தொடர்ந்து நிகழஇருக்கின்ற ஆய்வரங்கில் முன்பு கூறியவாறு போல உண்மை தருநாதனை விளங்கிவரும் குருநாதன் முன்னின்றருளப் பல அறிஞர் பெருமக்கள் தம் ஆய்வுரைகளை வழங்க இருக்கின்றார்கள். நம் சமயநெறி உலகம் தழுவிவாழவும் வளரவும் கருதும் குறிக்கோளுடையதாகும்.

" மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம் "

" அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் "

எனவரும் பொருண் மொழிகள் இவ்வுண்மையை விளக்குவன வாகும். இந்நிலையில் இங்கு வந்திருக்கும் அறிஞர் பெருமக்கள் தமிழ்கூறு நல்லுலகத்து மட்டுமின்றிக் கடல்கடந்த அப்பாலும் அடிச்சார்ந்தாராக விளங்கி நிற்கும் அறிஞர் பெருமக்களும் ஆவர். உரை நிகழ்த்துவோர் திறனோடு அதனைக் கேட்போர் திறனும் சிறந்திருத்தல் வேண்டும். அந்நிலையிலும் இதனைக் கேட்க வந்திருப்பவர்களும் தக்கவர்களாகவும் அறிவிலும் சமயப்பண்பிலும் மிக்கவர்களாகவும் விளங்குகின்றவராய் உள்ளனர்.

" நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக்கிழி தருமிக்கு அருளியவன் "

நம் சொக்கநாதப் பெருமான் புலவர்க்குப்புலவராய் இருந்தருளி அகத்தியர்க்குத்தமிழ் அறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசார்யனாக விளங்குபவன் நம் செந்தில் பெருமான். எனவே இவ்வரங்கில் அவ்விறையருள் ததும்பி நிற்கின்றது. தொடர்ந்து நின்றருளும் என்பதிலும் ஐயமில்லை. எனவே திருவருளும் குருவருளும் முன்னிற்க இவ்வரங்கு பேரரங்காய் உயரரங்காய்ப் பயனுள்ள அரங்காய் விளங்கும் என்பது ஒருதலை. அக்கருத்தரங்கில் கலந்து கொள்ள இருக்கும் ஆய்வறிஞர்கள், அன்பர்கள், தாய்மார்கள் அனைவரையும் உளமகிழ்ந்து வரவேற்கின்றேன்.

---

## ஆலய பராமரிப்பு

நன்றாகப் பராமரிக்கப்படும் ஆலயங்களுக்குச் சென்றாலே மனத்திற்குத் திருப்தியாக இருக்கின்றது. **தருமபுரம் ஆதீனம் மட்டும் எப்படி தன் கோயில்களை நன்றாகப் பார்த்துக்கொள்ள முடிகிறது. இதை எல்லாம்.... எடைபோட்டுச் செயல்பட வேண்டும்.** —நன்றி, **துக்ளக் – 1—8—84.**

கட்டுரை எண். 52

# அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M. A., B. Lit., D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்.

அரணம் பொருளென் றருளொன் றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்றழிய முனிந்தபெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி, தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே. 51

### அ. அரணம் பொருள் என்று அருள் ஒன்று இல்லாத அசுரர்.

(1) கோட்டைகளே உண்மையான பொருள் என்று தவருக எண்ணி ' இரக்கம் ' என்ற நல்லியல்பு ஒன்றினை விலக்கி வாழ்ந்த அசுரர்கள் என்கிருர்.

(2) பொன், வெள்ளி, இரும்பு ஆகிய உலோகங்களால் திரிபுர அசுரர்களின் கோட்டை மதில்கள் அமைந்திருந்தன. அவற்றின் உள்ளே எல்லாப் பொருள்களும் கிடைக்கப்பெற்று நினைத்த நேரத்தில் நினைத்த இடத்துக்குச் சென்று நினைந்தபடி வாழும் வாய்ப்பு திரிபுர அசுரர்களுக்குக் கிடைத்திருந்தது. அதனையே அவர்கள் உண்மையான பொருள் என்று எண்ணினர். அது என்றும் நிலைத்து நிற்கக்கூடியதுஎனத்தினைத் திருந்தனர். உயிர்களுக்குத் தீமை விளைவித்தலும், அவற்றினை அழித்தலும் இரக்கமற்ற செயல்கள் என்று எண்ணுது அவற்றினையே தொடர்ந்து வந்தனர். அதாவது, அரணமே பொருள் என்று எண்ணிவிட்டனர்.

(3) எல்லாச் செல்வங்களும், சிறப்புக்களும் இருந்தும் அவசியமான இரக்கம் என்ற ஒன்று மட்டும் இல்லாதவர்களாக இருந்தனர். அக்குறை மற்ற எல்லா நிறைகளையும் பயனற்றவைகளாக்கி, அவர்களது அழிவுக்கும் காரணமாகிவிட்டது. எனவே ' அருள் ஒன்று இல்லாத அசுரர் என்ருர்.

(4) தனது நடுவுநிலையினின்றுபிறழாமல் நிற்கக்காலனுக்கு இரக்கமின்மை அவசியமாகிறது. எனினும், அவனது இரக்க மின்மையினைக் கூட இறைவன் கடிந்தான். "இரக்கமொன்றி யாதுமில்லாக் காலனைக் கடிந்த எம்மான்" என்பது அப்பர் தேவாரம்.

(5) திரிபுர அசுரர்கள் போலவே இராவணனும் அவனைச் சார்ந்தாரும் இரக்கமின்றி வாழ்ந்தனர்.

"இரக்க மென்று ஒருபொருள் இலாத நெஞ்சினர்
அரக்கர் என்றுளார் அறத்தின் நீங்கினர்"

எனக் கம்பன் அவர்களிடம் அவசியமான ஒருபொருள் இன்மை யினைச் சுட்டிக்காட்டுகிருன்.

### ஆ. அசுரர் தங்கள் முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனும் சரணம் சரணம் எனநின்ற நாயகி.

(1) தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் அவ்வசுரர்களின் வலிமை அழியும்படி முற்காலத்தில் வெகுண்ட சிவபெருமானும், திருமாலும் உனது திருவடியே அடைக்கலம் என்று நிற்கும் சிறப்புடைய தலைவியாவாள் அபிராமி.

(2) கடும்முயற்சி எதுவுமின்றி அசுரர்களைத் தான் சினந்த மாத்திரத்திலேயே அழித்துவிட்டதால் 'முனிந்த' என்றும், அம்முனிவு உயிர்களின் நன்மையினைக் கருதியே ஏற்பட்டதால் 'முனிந்த பெம்மான்' என்றும் கூறினர்.

(3) 'முகுந்தன்' என்ருல் முக்தியளிப்பவன் என்பது பொருள். இங்குத் திருமாலைக் குறித்தது. அம்பிகைக்கும் சகஸ்ர நாமத்தில் 'முகுந்தா' என்ற நாமம் உண்டு.

(4) திரிபுர சம்ஹாரம் என்பது மும்மல நீக்கம். மும்மல நீக்கம் செய்து உயிர்களை முக்திக்கு உயர்த்த இருவரும் அவளைச் 'சரண்' என்கின்றனர். "சத்தி என்பாள் ஒரு சாதகப் பெண் பிள்ளை முத்திக்கு நாயகி" என்கிருர் திருமூலர். திருமந்திரத்தில் வரும் நாயகி என்ற சொல்லே இங்கும் வந்திருக்கிறது.

தனது வழிபடு தெய்வத்தின் ஏற்றம் கூறஎண்ணி இருவரும் சரணம் சரணம் என்னும் நிலையினைக் காட்டினர். இது சிவாப சாரமோ, விஷ்ணு நிந்தையோ ஆகாது. 'நஹி நிந்தா நியாய'த் தின் பாற்படும்.

(5) "நிர்க்குணப்ரம்ம ஸ்வரூபமான பராசக்தியின் அதிஷ்டானத்தாலேயே சகுண மூர்த்திகளான பரமசிவன், திருமால் முதலியோர் தோன்றி அவளுடைய அம்ச பூதைகளான சக்திகளையே சேர்ந்து தொழிலாற்றுகின்றனர். தாயார் ஸ்தானத்தில் இருப்பவளைச் சரணம் அடைதல் என்ன குற்றம் ?" – இவ்வாறு விளக்குகிறார் உரையாசிரியர் சண்முகநாதன் அவர்கள்.

'அடையார் தம் அரண் மூன்றும் சீரின் மல்கு மலையே சிலையாக முனிந்தான் உலகுய்ய' என்பது சம்பந்தர் தேவாரம். எல்லாத் திருமுறைகளிலும் பல இடங்களில் முப்புரம் முனிந்த வரலாறு பேசப்படுகிறது.

## இ. நாயகி தன்னடியார் மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

(1) முத்திக்கு நாயகியான அவளது அடியவர்கள் இவ்வுலகில் இறப்பு, பிறப்பு ஆகிய இரண்டினையும் எய்துவதில்லை. அதாவது முத்தி ( ஜீவன்முத்தி ) எய்துகின்றனர்.

(2) 'இனிப்பிறவியில்லை' என்ற நிலை எய்திய கடைசிப் பிறவியிலேயே அம்பிகையை வழிபடும் வாய்ப்புக்கிட்டும் என்ற ஸ்ரீவித்யா மரபுப்படி அன்னையின் அடியவர்கள் இனிப் பிறவா முத்திநிலை எய்துகின்றனர். பிறப்பு இன்மையால் இறப்பும் இல்லாமற்போகிறது.

(3) அடியார் இனிப்பிறவார் என்பது நிச்சயம். ஆனல், இறவார் என்பது எப்படிப் பொருந்தும்? இவ்வையகத்தில் பிறந்தோர் இறந்தேயாக வேண்டும்? என்ற வினு எழுகிறது. மற்றவர்கள் பிறவிக்குக் காரணமான மரணம் அடைகின்றனர். ஆனல் அடியார்கள் பிறவாத நிலையினை எய்திவிடுவதால் அந்நிலைக்குச் செல்லும் மறைவு மரணம் என்ற சொல்லில் அடங்காது. காலன்வழி, அவன் நினைத்த பொழுது வருவதே மரணம். அக்காலனின் குறுக்கீடு இன்றித்தாம் நினைத்தபொழுது இறைவனுடன் கலத்தல் அடியார்களுக்கு இயலும். ஆகையால் அது மரணம் ஆகாது.

(4) வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்த துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்ருய் உடம்பொடு
செத்திட் டிருப்பார் சிவயோ கியர்களே.

என்ற திருமந்திரப்படி யோகியர் தாமே விரும்பி உடம்போடு செத்திட்டிருப்பதால் அவர்கள் இனியும் மரணம் எய்தும் வாய்ப்பில்லை.

அவ்வாறே :—

" இட்டதவ் வீடிகளாதி ரேசித்துப்
புட்டிபட தசநாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனுங்கும்பித்து
நட்டம் இருக்க நமன் இல்லைதானே "

என்ற திருமந்திரப்படி அவர்களுக்கு மரணம் இல்லை என்பது தெளிவாகிறது.

(5) " நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்தநேரத்திலும் கோலக்குறத்தியுடன் வருவான்; குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிவார் சிவயோகிகளே காலத்தை வென்றிருப்பார். மரிப்பார் வெறுங்கர்மிகளே." என்ற கந்தர் அலங்காரத்தில் குருநாதன் வழியாக உண்மை நெறிகளைத் தெரிந்து, தெளிந்து நன்றாய் அறிகின்றனர் சிவயோகிகள் என்பது நன்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தகையோரேமரணமிலாப் பெருவாழ்வு எய்துகின்றனர் என்பதும் வெறுங்கர்மிகள் மரிக்கின்றனர் என்பதும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

(6) அடியார்களும், துறவிகளும், யோகிகளும் மறையும் பொழுது ' பரிபூரணம் எய்தினர் ' என்றும், ' சித்தியடைந்தார் ' என்றும் கூறும் மரபு இதனை ஒட்டியே எழுந்தது. ' திருநாடு எழுந்தருளினர்', என்று கூறுவது வைணவ சம்பிரதாயமாகும்.

இப்பூமியில் வாழ்ந்திருந்து சிவயோகம் கைவரப்பெற்ற நாயன்மார்கள் எவருக்கும் சமாதி அல்லது கல்லறை என்பது இல்லாமை இங்கு எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

(7) சிவயோகிகளுக்குக் குறிப்பிட்ட நிலை இங்கு அன்னையின் அடியார்களுக்கு எப்படிப் பொருந்தும் ? தென்னாட்டைப் பொறுத்தவரை அம்பிகையடியார்கள், முருகனடியார்கள், கணபதிபக்தர்கள் யாவரும் சைவர்களே ஆவார்கள். அவர்கள் பின்பற்றும் யோகநெறி சிவயோகமாகும். சிவயோகம் கைவரப் பெறுதலே இப்பாடலின்பாராயணபலனும் ஆகும்.

(தொடரும்)

# தன்னை நினையத் தருதல்

தருமையாதீனப்புலவர், செஞ்சொற்கொண்டல், தமிழாகரர்,
டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் M. A., Ph. D.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.

( மலர் 43, இதழ் 9, பக்கம் 423 இன் தொடர்ச்சி )

## தன்னை நினையத் தருதல் – பொருளாழம் :

பெருங்கருணையால் திருவுள்ளத்தே நினைந்து, அடிமை கொண்டு, அதனுடன் அமையாது பிறவித்துன்பத்தைத் தீர்த்த பேரருளாளனாகிய விநாயகன், மேலும் மேலும் தன்னை இடையறவு படாது நினைந்து போற்றும் மெய்ஞ்ஞானத்தை வழங்கியருள்கின்றான் என்று கூறி மகிழ்வதே இப்பாட்டின் இடைப்பகுதியாகிய " தன்னை நினையத் தருகின்றான் " என்பது. பரம்பொருள் தன்னை நினைக்குமாறு உயிர்களுக்கு உள்நின்று உணர்த்துதல் வேண்டும்; அவ்வாறு உணர்த்தாவிட்டால் தானே உணரும் உணர்வு இல்லாத உயிர்க்கு ஞானம் பிறவாது என்பது சித்தாந்தச் செம்பொருள். அவன் நினையுமாறு செய்யாவிட்டால், தம்மால் நினைக்க இயலாது என்பது இங்கு நம்பிகள் உணர்த்தும் உண்மை. " உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன், கணத்தும் உணரும் வகை காணேன் " என்று சிவபோகசாரத்து அருளும் குரு முதல்வர் திருவாக்கினை இங்கு ஒப்பிட்டுணரலாம். ' தன்னை நினைக்கத்தருகின்றான் ' என்று கொண்டால் ( ' தரு ' என்பதனைத் துணைவினையாகக் கொள்ளல்; நிகழும் – நிகழ்தரும், உரைக்கும் – உரைதரும் என்பனபோல ) தன்னை நினைக்குமாறு செய்கின்றான என்ற அளவோடு நிற்குமே அன்றி, நினைப்பதற்குக் கைமாறாக யாது தருகின்றான் என்ற விளக்கம் பெறப்படாது. ' மெய்ஞ்ஞானத்தைத் தருகின்றான் ' என்ற அரிய விளக்கம் பெற வேண்டுமாயின், ' தரு ' என்பதனைத் துணைவினையாக்கி ' நினையத்தரு ' என்று கொள்ளக்கூடாது.

இனி, " நினையத் தன்னைத் தருகின்றான் " என்று மாற்றிக் கொண்டால் வரும் பொருள் மேலும் சிறந்து நிற்றல் கருதத் தக்கது. ' நான் நினைத்தலும் அதற்குக் கைம்மாறாகத் தன்னை...

எனக்குத் தருகின்றான்' என்ற செம்பொருள் அப்போது கிடைக்கும்; "தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னை" என்ற திருவாசகப் பொருண்மைஅதற்கு அரண்செய்வதாகவும், விளக்கம் காண்பதாகவும் அமைதல் காணலாம். "தம்மையே தமர்க்கும் நல்கும் தனிப்பெரும் பதத்தை" என்ற கம்பன் தொடரும் கருத்திற்றேன்றிக் களிப்பூட்டி நிற்கும்.

## வெண்பாக்கொண்ட வேழமுகன் :

திருமுகத்தாற் கருமை நிறம் கொண்டவன் என்றாலும், தனிமைய இருந்து தன்னைத் தியானித்தவர்க்கு வெளிப்பட்டு நிற்பான் (வெளியன் – வெண்மையானவன் என்ற பொருளும் தோன்றிற்று.) இந்த மெய்ம்மையை அறிந்து வழிபடுகின்ற அடியவர் மனத்தில் தானே எழுந்தருளுவான் என்பர் இரண்டாம் பாடலில்; "விரும்படியார் அகத்தான்" என்பது அழகிய தொடர். இவ்வாறு தம்மநுபவம் புலப்படுத்தும் பகுதியாக உள்ளது தன்னை நினையத்தருதல் என்ற தொடர்.

> "யானேத்திய வெண்பா என்னை நினைந்தடிமை
> தானே சஞர்த்தனற்கு நல்கினன் — தேனே
> தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலன்ஏந்தி
> எடுத்த மதமுகத்த ஏறு"

என்று இம்முதற்பாட்டின் பொருள் உணர்ந்து பாராட்டி, இராசராசன் (திருமாலின் தோற்றமெனத்தக்கவன்) தம்வழியே திருத்தொண்டத்தொகை வழியே – திருமுறைகள் தொகுக்கப் பெறும் வாய்ப்பை வழங்கிய வள்ளற்பெருமான் பொல்லாப் பிள்ளையாரே என்ற குறிப்பை இரட்டைமணிமாலையில் பின்னே (13) புலப்படுத்தினர் நம்பிகள்.

பரம்பொருள் உயிர்கட்கு உதவும் பெருங்கருணையைத் திட்பநுட்பமுற விளக்கும் இத்தொடரையும், இஃதமைந்த இரட்டைமணிமாலையையும் ஓதி வேழமுகன் அருளைப்பெறுவது சைவமக்களின் தலையாயகடன்.

சிவஞானபோதத்துப் பதினேராம் சூத்திரம் இறைவனின் காட்டும் உதவியை உணர்த்துவது காண்க:

> " காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
> காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
> ... ... ... ... ... செலுமே."

இறைவன் உயிர்கட்கு, உள்ளேதோன்றுமல் நின்று இயக்குவதனுல் அனைத்தும் இயங்குகின்றன. அவன் இயக்காவிட்டால் ஒன்றும் இயங்காது; அவன்காட்டுமாற்ருல் காண இயல்கின்றது; அவன் காட்டாக்கால் காண்பார் ஆர்? என்பது அப்பரடிகளார் தெளிந்த முடிவு:

" காட்டு வித்தால் ஆர் ஒருவர் காணுதாரே
காண்பார்ஆர் கண்ணுதலார்க் காட்டக்காலே " 6-95-3

தன்னை நினைப்பித்துப் பயன்கொள்ளுமாறு செய்பவன் அவனே என்ற சித்தாந்த நுட்பமே, " தன்னை நினையத் தருகின்ருன் " என்ற சொற்களில் இரத்தினச் சுருக்கமாகத் திகழ்கின்றது எனலாம்.

---

**கடிதம் :**

பொ. இரா. சுப்பிரமணியன் பி. எஸ்ஸி., அறந்தாங்கி
வேளாண்மை உதவி இயக்குநர்,
( பயிற்சிவழி தொடர்பு திட்டம். ) 11—7—84

தவத்திரு தருமபுர ஆதீன குருமகாசந்நிதானம் அவர்கட்கு, தாளடி போற்றி வணக்கம்.

தருமை ஆதீனத்தில் சமீபத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த கருத்தரங்கு ஒன்று நடத்தி மாபெரும் சிறப்பைக் கூட்டி சைவ சமய மக்களுக்கும் அளப்பரும் மன மகிழ்ச்சியைக் கூட்டுவித்த பெரும் பேறு உங்களைச் சாரும். இப்பெரும் சிறப்பைக் கூட்டிய தங்கள் பெருந்தகைமையைத்தமிழ்ச்சமுதாயம்என்றும்போற்றக் கடமைப்பட்டுள்ளது.

இவ்வரிய கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. எனினும் செய்திகளின் வாயிலாக ஓரளவே அறிந்தேன். 'சைவசித்தாந்த மேல்நிலை ஆய்வுமையம்' ஒன்று நிறுவும் செய்தியறிந்து பேருவகை எய்தினேன். வாழ்க சைவ சித்தாந்தம் ! வளர்க தங்கள் தொண்டு !

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

# திருவருட்பாத் திரட்டு

( பொழிப்புரையுடன் )

**வித்துவான் திருமதி. ப. நீலா** எம். ஏ.,

( மலர் 43, இதழ் 9, பக்கம் 431 இன் தொடர்ச்சி. )

கிடுகிடென்றே நடுங்கப் பிரமர்தலை பாத
கிண்கிணி யெனக் கட்டுவாய்
கிளரண்ட கோடிகள் குலுங்க அடியாரோடு
கெர்ச்சித்து விளையாடுவாய்
படம்விரித் திடுமுரக சயனரை யிரத்தமென்
பலிகொடென்றே நடப்பாய்
பங்கயச் செல்விக்கு மாங்கல்லியப் பிச்சை
பார்வையாலே கொடுப்பாய்
சுடர்வணத் தரனடியர் முன்வந்த கூற்றினைச்
சூலத்தினாற் கொல்லுவாய்
சயமே பிரகாசிக்கும் நின்புகழை யெளியனேன்
சொல்லுதற் கெளிதாகுமோ
கடன்மடை திறந்தனைய கருணைவெள்ளம் பொழியக் *
கடாக்ஷம்வைத் தருள்வடுகனே
காசியெனும் ஒருவார ணசிநக ரானந்த
கால வயிரவ நாதனே. 4

(பொ - ரை) கிடுகிடென்று நடுங்குபடி பிரமர்களின் தலை பாத கிண்கிணியாகக் கட்டுபவன், அண்ட கோடிகள் குலுங்க அடியாரோடு கர்சனைசெய்து விளையாடுபவன். ஆத்சேடனில் சயனிக்கும் திருமாலை இரத்தபலியாகக் கேட்பவன். பின் தாமரை மேலுறைபவளுக்குப் பார்வையால் மாங்கல்ய பிச்சை கொடுப்பவன். தீவண்ணமான நிறமுடையன் தன் அடியார் மேல் வந்த கூற்றுவனைச் சூலத்தினால் கொல்பவன், இப்படி இயல்பாகவே ஒளிவிடும் உனது புகழை எளியேன் சொல்வது எளிதோ ! கடல்மடை திறந்ததுபோல் பொழியும் கருணை வெள்ளம் என்பாலும் நிறையும்படி அருள்செய்க.

---

*கடைசிவரியில் 'பொழி' என்றுதான் 1972-ம்வருடப்பதிப்பில் இருக்கிறது. ஓசை குறைவதைச் செவி உணர்த்த - ஓரசையாக உள்ளதை கண்காண பொழிய - என ஓரசை கூட்டப் பட்டது.

(கு – ரை) சுயப்பிரகாசம் – இயற்கையான ஒளி. பிரமர் தலைகளைக் கிண்கிணியாக்கட்டுவதை முன்னேயும் (2-6) கூறினர். காலனைச் சூலத்தால் வதைத்தது–

'கொல்லும் மூவிலை வேலுடையானைக்
கொடிய காலனையுங் குமைத்தானை' (7-56, 3)

என்பார் சுந்தரர்.

குருதூடணம் பண்ணுவோர் பயந்துய்யவே
கோகநத னோர் சிரத்தைக்
கொய்து செங்கையிற் பிடித்து நின்ருயருட்
கோயிலுறை லிங்கவடிவில்
தருநேச மில்லாதபேர் பயந்துய்யவே
சண்டனை யுதைத் தடித்தாய்
சங்கமத் ரோகிகள் பயந்திடப் பச்சைமால்
தனையுரித்தே தரித்தாய்
உருவான மூவடிவி லன்பிலோர்க் கின்னநீ
உக்ர திரிசூலம் வைத்தாய்
உன்கருணைரச மிகுங்கோபரசம் வீரரசம்
ஒருவரும் உரைக்க வசமோ
கருநீலகண்ட கங்காதர திரியம்பகா
கயிலாச கிரிகாவலா
காசியெனும் ஒருவார ணசிநக ரானந்த
கால வயிரவ நாதனே. 5

(பொ – ரை) குருவை நிந்தனை செய்வோர் பயந்திடவும் உய்ந்திடவும் பிரமனின் ஓர் சிரத்தைக் கிள்ளிச் செங்கையில் கொண்டாய். அருட்கோயிலில் உறையும் சிவலிங்கவடிவில் அன்பு வையாதவர்கள் பயந்திடவும் உய்ந்திடவும் யமனை உதைத்துத் தள்ளினுய். அடியார்களுக்கு ஊறுசெய்பவர்கள் பயப்படும்படி பச்சை வண்ணத் திருமாலை உரித்துத் தரித்தாய். உருவான மூன்றுவடிவங்களிலும் (குரு, லிங்க, சங்கமர்) அன்பு வையாதவர்களுக்காக (அச்சம் ஊட்டும்வகை அடையாள வகை) இரண்டு வகையாக இப்படி நீ திரிசூலம் வைத்துள்ளாய். உனது கருணை, கோபம், வீரமென்ற சுவைகளைக்கருநீலக்கழுத்துடைய கங்கையணிந்த கயிலைக்காவல – காலவயிரவனே ஒருவராலும் எடுத்துச் சொல்ல முடியாது.

(கு - ரை) குரு, லிங்க வடிவத்தில் அன்பிலாதோர்கூட உயிர்பிழைத்திடலாம்-சங்கமத்துரோகிகள் உயிர்தப்பமுடியாது என்பார் முன்னிருவருக்கும் தண்டனை தந்ததை மட்டுமே குறித்து - திருமால் தோலுரிபட்டதைக் காட்டினர். முன்னிரு வகையார் பயந்துய்ய - சந்தர்ப்பமுண்டு. மூன்ருவது வகையினர் பயந்திடவே - வேண்டும் - எனச்சொல்லாலும் - அடியார் துரோகத்தை - பயப்படும்படி எடுத்துக் கூறினர் ஆசிரியர், பிரமனின் ஒருசிகரம் கொய்தது - கருணைரச வெளிப்பாடாக. யமனை உதைத்து உருட்டியது - கோபரச வெளிப்பாடாக திருமாலை உரித்தது - வீரச்சுவையின் உச்சமாக அமைந்த பாங்கும் நிரலாக உள்ளன. மூன்று என்ற குருலிங்க சங்கம வழிபாடு பிழையற்க - என்பதற்காகவே முவடிவ திரிசூலம் இறைவன் கையிலிருக்கிறது-என்பது எண்ண இன்பம்தருவது. இப்படியான தற்குறிப்பேற்றத்திற்கு 'தண்டமிழ் மூன்றும் வல்லோன் தானெனக் குறியிட்டாங்கே புண்டரநுதலில்பூத்துப் பொய்யிருள் கிழித்துத்தள்ள'-என மூன்ருக உள்ளதிருநீற்றுக் கோடுகளுக்கு - விளக்கம்தந்தார் பரஞ்சோதியார் (திருவிளை - தருமிக்குப்பொற் - 99) கழுக்கடை - சூலம். ஆன்மாக்களை அநாதியே பந்தித்துள்ள மும்மலங்களைக் கழுவுதற்காக இறைவன் அறிவு இச்சை செயல்களை முத்தலை வேலாக் கொண்டுள்ளான் என்பது குறிப்பு என - ஒருவிளக்கம் (திருவா. கீர்த்தி 110 - வரி) தந்தார் திரு. ச. தண்டபாணிதேசிகர். (த. ஆ. வெ. எண் 202. 1949)

குருநிந்தனை- சிவனையும் சிவனுருவாம் முருகனையும் - முதல்வனென மதிக்காது - தன்னையேமுதல்வனாய் எண்ணித்தருக்கி நின்ற பிரமன் செயல்.

இலிங்க நிந்தனை-மார்க்கண்டேயருக்குவிதித்த வயதெல்லை முடியவே-அவரணைத்திருந்த சிவலிங்க வடிவத்திலும் படும்படி 'பாசம்' வீசி - சிவாபராதம் செய்த யமன் செயல்.

அடியார் நிந்தனை - மகாபலியிடம் மூன்றடிமண் கேட்டு - அவனைப் பூமியில் அழுத்தியபின் செருக்குடன் உலகைத் துன்புறுத்திய திருமால் செயல். சிவன் திரிவிகரமனின் முதுகெலும்பை - தனதாக்கிக்கொண்டார். சிவன் திரிவிக்ர ...... கொண்டார்.

'பூமிசையோன் தார்முடி கொய்தது கூருகிரே, ஆருயிருண்-
கூற்றுயிருண்ட தடித்தலமே'- (சிதம். செய். 21

வாமனனர் மாகாயத் துதிரங்கொண்டார் (6 - 96 - 1) என்பதும் காண்க.

அடியொன்று பொற்சிலம்பைக் குலுக்கில் பெரிய
அட்டநாகங் குலுங்க
அட்ட மாதங்கங் குலுங்க விண்முகடு தொடும்
அட்ட குலகிரி குலுங்க
குடிகொண்ட கூற்றுடல் குலுங்க நான்முகனுடல்
குலுங்க வரியுடல் குலுங்கக்
கோதண்ட மானநடு மலைகுலுங்கக் கோடி
கோடி யண்டங் குலுங்குந்
துடியொன்றை நீயசைத்தா லகில சகம்வரும்
சுருதிதரு மந்த்ரவடிவாஞ்
சொர்ணவாகன தண்ட பாணியுன் னதிபலஞ்
சொல்லுதற் கெளிதா குமோ
கடிகொண்ட கற்பகாடவி யளவு கோபுரங்
கனககிரி யென விளங்குங்
காசியெனும் ஒருவார ணசிநக ரானந்த
கால வயிரவ நாதனே. 6

(பொ - ரை) மணம்மிகுந்த கற்பகச்சோலைவரை உயர்ந்த கோபுரம் பொன்மலையெனவிளங்கும் காசிநகர்கொண்டோனே, திருவடியில் பொருந்தியுள்ள பொற்சிலம்பை நீ அசைத்தால் திசைகளைத் தாங்கும் பெரிய எட்டான பாம்புகளும், எட்டான யானைகளும், ஆகாயந் தீண்டுகின்ற எட்டான மலைகளும், கூற்றுவன், நான்முகன், திருமால் இவர்கள் உடல்களும், வில்லாகநின்ற மேருமலையும், கோடிகோடி அண்டங்களும் குலுங்கி அசையுமே, சகல உலகங்களையும் வலம்வருவதற்கான வேதங்களைத் தந்த மந்திரவடிவான தங்கவாகனமுடைய தண்டபாணியே-துடியொன்றை நீ அசைத்தால் உனதுஉயர்ந்த பலத்தினைச் சொல்வது எளிதாகுமோ!

(கு - ரை) அட்டநாகம் : அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி

அட்டயானை : ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபூமம், சுப்ரதீபம்.

அட்டகிரி : ஏழுகடலைச்சூழ்ந்த ஏழுமலையும் சக்ரவாளகிரி யும். கைலை,இமயம், மந்தரம், விந்தம்,நிடதம், ஏமகூடம், நீலகிரி கந்தமாதனம். இவைகள் உலகைத் தாங்குவன. அகிலசகம்

(வலம்) வரு சொர்ணவாகனம் எனக்கூட்டியும், மந்திரவடிவாம் சொர்ணவாகனம் எனக்கூட்டியும் பொருள் இருவகையாலும் கொள்ளலாம்.

உலகடைய நொடியில்வரு சித்ரக்கலாபமயிலாம்

(மயில். விரு. 1)

ஆன தனிமந்த்ர ரூபநிலைகொண்ட
தாடுமயி லென்ப தறியேனே (திருப்பு - 439.)

மந்திரவடிவாம் தண்டபாணி - எனக்கூட்டினுல் - பட்டாங்கு பொருள் கூறுக! 'வேதமந்த்ர சொரூபா நமோ நம' (திருப்பு-104) 'தில்லையம்பலம் போற்கோலத்தினுள் பொருட்டாக'-(திருக்கோ -27)என்பதற்கு-அம்பலம் போலுமென்னும்உவமை பட்டாங்கு சொல்லுதற்கண் வந்தது - எனப் பேராசிரியர் குறிப்பிடுவார் - நோக்குக. தண்டபாணி- கோலுடைக்கையன். (தொடரும்)

---

# திருக்குறள் ஒரு கம்ப்யூட்டரின் மதிப்பீடு.

தஞ்சாவூர், ஜூலை 21 - தமிழ் இலக்கியத்துக்கு உதவும் வகையில் தமிழ்ப் பாடல்களை கம்ப்யூட்டரில் புகுத்தியுள்ளார் ஒரு அணு விஞ்ஞானி.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உள்ள விஞ்ஞானி எஸ். ஸ்ரீனிவாசன் இந்த ஆராய்ச்சியை நடத்தியுள்ளார்.

திருக்குறளை அவர் கம்ப்யூட்டரில், அதன்மொழியில் புகுத்தியுள்ளார்.

அறத்துப்பாலின் 380 திருக்குறள்களையும் அவர் கம்ப்யூட்டர் மொழியில் புகுத்தியுள்ளார்.

அறத்துப்பாலில் உள்ள திருக்குறளில் 14756 எழுத்துக்கள் உள்ளன. 2715 " சீர் " கள் உள்ளன.

" த " என்ற எழுத்துதான் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. " ஒ " என்ற எழுத்துதான் குறைவாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவையெல்லாம் கம்ப்யூட்டர் தரும் தகவல்கள்.

— நன்றி தினமணி ஞாயிற்றுக்கிழமை 22—7—1984.

### தருமை ஆதீனம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

## அன்பகம் செவிடர் — ஊமையர் பள்ளி

மகாதானத்தெரு, மயிலாடுதுறை — 609 001.

[ ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பெருங்கருணையுடன் சமய சமுதாயப்பணிகள் புரிய ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் ஒரு பணிமன்றம் நாடு தழுவியநிலையில் நிறுவியுள்ளார்கள், அதன் அங்கமாகச் செவிடர், ஊமையர் பள்ளி "அன்பகம்" என்றபெயரில் 52 - A, மகாதானத்தெரு, மயிலாடுதுறை 609001. ( தொலைபேசி எண்:- 2649 ) நடைபெற்றுவருகின்றது, அப்பள்ளியில் 27 செவிடு — ஊமையரும் 2 மனநோய் மாணவர்களும் பயிற்சிபெற்றுவருகின்றனர். உணவுவிடுதியில் 7 மாணவர்கள் தங்கியிருக்கின்றனர். அவர்களது முன்னேற்றம் கருதி அன்பர்கள்பலரும் பெருவுளம் கொண்டு உதவ முன்வருவார்களாக. இப்புனிதப்பணிக்கு நன்கொடை வழங்கியவர்களின் விபரம் கீழே தரப்படுகிறது.]

### அன்பகத்தின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட நன்கொடை விபரம்

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் | ரூ. 101—00 |
| 2 | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமையாதீனம் | 1001—00 |
| 3 | ஜி. வாகீசம் பிள்ளை, கனகசபைநகர், சிதம்பரம். | 501—00 |
| 4 | டாக்டர். கே. அரங்கசாமி பிள்ளை கனகசபைநகர், சிதம்பரம். | 501—00 |
| 5 | ஆர். நடராஜம்பிள்ளை, கனகசபைநகர், சிதம்பரம். | 1000—00 |
| 6 | கே. சுவாமிநாதன், டாக்டர். பழனிசுவாமிநாதன், சிதம்பரம் | 250—00 |
| 7 | மாயூரம் இன்னர்வீல் கிளப் | 750—00 |
| 8 | ஏ. ஆர். சி. சண்முகம், மயிலாடுதுறை | 250—00 |
| 9 | வழக்கறிஞர் ஆர். செல்வராஜ், மயிலாடுதுறை | 100—00 |
| 10 | வழக்கறிஞர் எஸ். நாராயணன், மயிலாடுதுறை | 100—00 |
| 11 | ஆர். பரசுராமன், மயிலாடுதுறை | 100—00 |
| 12 | எஸ். பெருமாள்சாமி நாடார், மயிலாடுதுறை | 150—00 |

| | | |
|---|---|---|
| 13 | எம். கலியமூர்த்தி | ரூ. 100—00 |
| 14 | டாக்டர் எஸ். வீரராகவன், கும்பகோணம் | 250—00 |
| 15 | டாக்டர் எஸ். நடனசபாபதி, சிதம்பரம் | 25—00 |
| 16 | வழக்கறிஞர் எஸ். ஆறுமுகம், மயிலாடுதுறை | 200—00 |
| 17 | ஆர். வெங்கடேஷ், மயிலாடுதுறை | 1050—00 |
| 18 | அன்பகம் - நிர்வாகக்குழுவினர் | 280—00 |
| 19 | பேராசிரியர் சண்முகம், மயிலாடுதுறை. | 100—00 |
| 20 | ஹில்டுருட் பிட்ச் | 100—00 |
| | ஆ, ரூ. | 6909—00 |

## குருமணியின் அருள்மொழி

### ஞானசிரியர்கள்

சமுதாயத்திற்கு நாம்செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் அறநிறுவனங்களுக்கு உண்டு. ஆன்மீகப் பணியே அறநிறுவனங்களின் குறிக்கோள். உலகத்தில் உடலுக்கு மருத்துவர்கள் இருக்கிறார்கள். உயிருக்கு ஞானசிரியர்களே மருத்துவர்கள். சமுதாயத்தில் பரவியுள்ள அறியாமை நோயைப் போக்கி அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பவர்களே உயிர் மருத்துவர்களாகிய ஞானசிரியர்கள்.

### தவம்

தவம் என்றால் என்ன? ஒரு சில லட்சியங்களை உயரிய குறிக்கோள்களை மேற்கொண்டு அவரவரும் தம்வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடிப்பேன் என்று உறுதி எடுத்துக்கொண்டுநிறைவேற்றுவதுதான் தவம். உறுதி எடுத்துக் கொண்டவற்றைக் கைவிடாமல் காப்பதே விரதம். தாம் மேற்கொண்டநற்செயல்களைக் கடைப்பிடிப்பதில் எத்தகைய இடையூறுகள்வந்தாலும் அவற்றைக்கை விடாமல் காக்கவேண்டும்.

# அகத்திக்கீரை

[ வைத்திய இரத்தினம் திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள், சென்னை இறையாட்சி இந்திய மருத்துவக் கலாசாலை, சித்த மருத்துவத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர்கள். அவரது நூலான 'பொருட்பண்பு நூல்பயிர் வகுப்பு — குணபாடம்' ( *Materia Madica* ) முதற் பாகத்திலிருந்து அகத்திக்கீரைப் பற்றிய இக்கட்டுரை தொகுக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு 1952. தொகுத்தவர்: "செந்தில் குமரன்"]

அகத்திக்கீரைக்கு அச்சம், முனி, கரீரம் என்ற வேறு பெயர்களும் உண்டு. ஆங்கிலத்தில் இதற்குள்ள தாவரவியற் பெயர் Sesbania grandiflora என்பதாகும். அகத்திசாழை அகத்தி, சிற்றகத்தி, சீமை அகத்தி, செவ்வகத்தி எனப்பல வகைப்படும். அகத்தியின் இலை, பூ, பட்டை, வேர் முதலியன மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. அகத்தி நஞ்சை (விஷம்) மாற்ற வல்லது. குளிர்ச்சி உண்டாக்கக் கூடியது. மலம் இளக்கக்கூடியது. புழுக்கொல்லியும் ( Vermifuge ) ஆகும்.

அகத்தி, இந்தியாவில் எங்கும் ஏராளமாகத் தோட்டக்கால் பயிரா ஃ வளர்க்கப்படுகிறது. இது மரம்போல 20 அடி முதல் 30 அடி உயரம் வரை வளரும். மரம்போல் இருப்பினும் இது செடி வகுப்பில் அடங்கும். மிகுதியும் இச்செடிகள் வெற்றிலைக் கொடிக்கால்களிலும், நீர்தங்கிய பூமியிலும் பயிர்செய்யப் படுகிறது அகத்தி தைமாதம் முதல் மாசிமாதம் வரையிலும் பூத்துக்காய்க்கும்.

இக்கீரை இடுமருந்தை முரிப்பதுபோல, மற்ற மருந்து களின் செய்கையையும் கெடுக்கும். ஆதலால் நோயாளி களுக்கு மருந்து ஊட்டுங்காலத்தில் இது நீக்கப்படுகிறது. இஃது இடுமருந்தின் தோடத்தை நீக்கும். உடலில் எழும் பித்தத்தைத் தணிக்கும். உணவைச் செரிப்பிக்கும். பல்லுக்கு வலிமைஊட்டவல்லது.

" மருந்திடுதல் போகும்காண் வன்கிரந்தி வாய்வாம்
திருந்த அசனம் செரிக்கும் — வருந்தச்
சகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளும்
அகத்தியிலை தின்னும் அவர்க்கு" (அகத்தியர்குணபாடம்)

இக்கீரையின் சாற்றைப் பிழிந்து மூக்கில் இரண்டொரு துளிவிட நான்காம் முறைக்காய்ச்சல் விலகும். மற்றைய சுரங்களில் மேனிமேல் பூசிவர, வெப்பம் தணியும். தலையில் தேய்த்துத் தலைமுழுகப் பித்தம் நீங்கும். இலையை அறைத்துப் புற்கை செய்து காயங்களுக்குக் கட்டலாம். செவ்வகத்தி பலவிதமான சிந்தூரம், நவநீதபற்பம், தாளக சுத்தி இவைகளைச் செய்தற்கு உதவும். அகத்தியில் வைட்டமின் C சத்துண்டு.

அகத்தியின் பூச்சாற்றைக் கண்ணில் பிழியக் கண்நோய் போகும். இலையைச்சமைத்து உண்பதுபோல, இதன் பூவையும் சமைத்து உண்ணலாம். வெயில் முதலியவற்றாலும் புகையிலை போன்ற லாகிரிப் பொருள்களாலும் தோன்றும் கேடுகளும் வெப்பமும் இதன்மூலம் தணியும்.

" புகைப்பித்த மும் அழலால் பூரிக்கும் அந்த
வகைப்பித்த மும் அனலும் மாறும் — பகுத்துச்
சகத்தில் அருந்தாத் தனியமிர்தே நாளும்
அகத்தி மலரின் கறி"

பார்ப்பதற்குப்பயத்தை விளைவிக்குமாறு மூக்கின் வழியாய் விழுகிற இரத்தப்பெருக்கை இது விரைவில் நிறுத்தவல்லது. இஃது உள்வெப்பத்தையும் போக்கும்.

அகத்திமரப்பட்டையைவிதிப்படி குடிநீர்செய்து பருகலாம். அம்மைக் காய்ச்சல், அல்லது அதைப்போன்ற நச்சுச்சுரங்கள் இக்குடிநீரால் தீரும். அகத்திவேரிலும் மருத்துவப்பயன் உள்ளது. இது மேகம், நீர்வேட்கை, மெய்எரிவு, கைஎரிவு, ஐம்பொறிகளைச்சேர்ந்த பிற எரிவு ஆகியவற்றைப் போக்கும்.

" நல்லகத்தி வேரதனை நாடுங்கால் மேகமெனும்
சொல்லகலும் தாகம்அறும் தோகையே —மெல்லமெல்ல
மெய்யெரிவு கையெரிவு மேகத்தின் உள்ளெரிவும்
ஐயெரிவும் போம் என்று அறி"

அகத்திக்கீரையை நாள்தோறும் உண்ணலாகாது. உண்டால் உடலுக்குக்கேடு உண்டாகும். குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே உண்ணலாம்.

செவ்வகத்தி வேர்ப்பட்டை ஊமத்தன்வேர் இவ்விரண்டையும் ஓர் அளவாக எடுத்தரைத்து வாதவிக்கத்திற்கும் கீல்வாயுக்களுக்கும் பற்றுப்போடலாம்.

அகத்திமலருக்கு இன்னொரு தனிச் சிறப்பும் உண்டு. அகத்திமலர் சிவபிரானுக்கு மாலையாகச்சாத்த மிகவும் உகந்தது என்று திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம் தெரிவிக்கிறது. திருத்துருத்திப் பதிகத்திலே இரண்டாவது பாடலில் இச்செய்தி நமக்கு வழங்கப்படுகிறது.

" அடுத்துஅடுத்து அகத்தியோடு வன்னிகொன்றை கூவிளம்
தொடுத்துடன் சடைப்பெய்தாய் துருத்தியாய்! ஓர்காலனைக்
கடுத்தடிப் புறத்தினா னிறத்துதைத்த காரணம்
எடுத்தெடுத் துரைக்குமாறு வல்லமாகின் நல்லமே. "

சிவபிரான்சடையில், அகத்திப்பூ, வன்னி இலை, கொன்றை மலர், வில்வம் என்பவற்றை அடுத்தடுத்து வைத்துத் தொடுத்த மாலையை அணிந்துள்ளான் என்னும் உண்மை வேறு யாண்டும் காண்டல் அரிது.

அகத்திமலர் ஆண்டவன்சடைமிசைப்பொலியும்சிறப்புடையது என்றால், அகத்தியின் சிறப்பு எத்தகையது பாருங்கள்!

---

**கடிதம்:**

வானொலிக்கவிஞர்
**செ. சி. இராமசாமி,**
18, கோவிந்தன் தெரு,
அரிசிப்பாளையம்.

சேலம் 636 009
19—8—84

## போற்றுகின்றோம் !

கற்காலம் முதற்கொண்டே கவினாய் ஓங்கும்
கனித்தமிழை முனைப்புடனே கற்றுத் தேர்ந்து
தற்காலம் தருமபுர ஆதீனத்தின்
தலைமையுறு மாசந்நிதானம் தங்கள்
பொற்கோலச் சிவநெறியைப் பூமேல்போற்றும்
பொலிவதனைப் பார்முற்றும் புகழும்! நல்ல
பொற்காலம் இக்காலம்! புனிதம் காணும்
புண்ணிய!நின் திருவடியைப் போற்றுகின்றேன்!

# கேதாரம் நோக்கி....!

திரு. வி. ஆறுமுகம் ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

( மலர் 43, இதழ் 9, பக்கம் 434 இன் தொடர்ச்சி. )

## 12. பத்ரிநாத்

பத்ரிநாத் சமுத்திர மட்டத்திலிருந்து 10,250 அடி உயரத்தில் உள்ளது. சுற்றிலும் பனிமலைச் சிகரங்கள்! கோவில் அலகநந்தா நதியின் வலப்புறக்கரையில் உள்ளது. பத்ரிநாதர் விக்ரகம் கருப்புநிற சாளிக்கிராமத்தினால் செய்யப்பட்டது; பத்மாசனத்தில் இருப்பதுபோன்ற உருவம்! கோவிலில்கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் ஆகியவைஉள்ளன. ராணி அகல்யாபாய் கர்ப்பக்கிரத்தில் தங்க அஸ்மானகிரி அமைத்துக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

சுவாமிக்கு அபிஷேகம் ஆகும்போது ஒரு நம்பூதிரி மஹாமண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு பத்ரிநாதர் பெருமையை எடுத்துச் சொல்வதோடு அபிஷேகம் நடப்பதையும் நேர்முக வருணனைபோல விபரமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் எதிர்ப்புறம் மூன்று நம்பூதிரிகள் உட்கார்ந்துகொண்டு வேதபாராயணம் செய்கின்றனர். இந்தக்காட்சி மனத்துக்கு இதமாய் இருக்கிறது!

முதல் நாள் மாலையும் பத்ரியில் வழிபட்டபோதும் மௌனமுனி என்ற தமிழர் – பத்ரியிலேயே தங்கித் தெய்வத்தொண்டு புரிபவர் – எங்களுக்கு மிகவும் உதவிபுரிந்தார்; மறக்கமுடியாத பேருதவி.

பகல் 11 மணிக்கு உணவருந்திவிட்டு, பத்ரியிலிருந்து ரிஷிகேசுக்குப் பயணமானோம். இரவு 7 மணிக்கு ருத்ரபிரயாக் வந்து தங்கிவிட்டோம்.

செப்டம்பர் 29 – வியாழன். கயிலை மாமுனிவர் அன்று மௌனவிரதம் பூண்டிருந்தார்கள். ஆதலால் முதல்நாள் பேசி முடிவுசெய்தபடி காலை 7–30 மணிக்குக் கிளம்பி 12 மணிக்கு ரிஷிகேஷ் வந்து லக்ஷ்மணஜூலா முதலிய இடங்களைப்பார்த்துவிட்டு ஒருநல்ல உணவுவிடுதியில் மதியஉணவு கொண்டோம்.

ரிஷிகேஷ் ஒரு புண்யஸ்தலம். இங்கே பல சந்நியாசிகள் வசிக்கிறார்கள். பலபிரசித்திப்பெற்ற ஆஸ்ரமங்கள், தர்மசாலைகள் உள்ளன. இங்கே சுவர்க்கஆசிரமம், கீதாபவன், பரமார்த்த ஆசிரமம் முதலியன முக்கியமானவை. இவைகளைப் பார்த்து மகிழ்ந்தோம்.

மாலை 3 மணிக்கு ஹரித்துவார் வந்து, மதராஸ் தர்மசாலையில் தங்கினோம். மறுநாளும் இங்கேயே தங்கிக் கங்கையில் நீராடிக் கங்கா பூஜை பார்த்துவிட்டு, அக்டோபர் முதல்தேதி கிளம்பி அடுத்தநாள் இரவு 9 மணிக்கு வாரணசி வந்து சேர்ந்தோம்.

## 13. பயணம் நிறைந்தது

அக்டோபர் 3 திங்கட்கிழமை. காசியில் கேதார்கட்டில் நீராடி, கேதார் நாதரைத் தரிசித்துவிட்டு, விஸ்வநாதர் கோவிலுக்குச் சென்று பால் அபிஷேகம் செய்தோம்.

காசியில் எங்குப்பார்த்தாலும் ஜனக்கூட்டத்தின் நடுவிலே பெரியபெரிய மாடுகள் சர்வசாதாரணமாக நடமாடுகின்றன. கடைவீதி, கோவில் எல்லாஇடங்களுக்கும் இவை போகின்றன. இன்னும் கொஞ்ச நாட்களில் ரயில் ஏறி ஒரு ஊரிலிருந்து அடுத்த ஊர்கூடப் போய்வந்தாலும்வரும்! குறுகியசந்துமிகுந்த ஊர். டவுன் பஸ்கள் கிடையாது. ஆட்டோ, ரிக்ஷா, டோங்கா அதிகம். ரிக்ஷா கட்டணம் அதிகமில்லை; குறைவு என்றே சொல்லவேண்டும்.

மாலை 5 மணிக்கு, நாயர் அவர்கள் கயிலைமாமுனிவர் அவர்களுக்குப் பொன்னடை போர்த்தி யாத்திரையை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தற்காகப் பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். திருமடத்து மேலாளர், திரு. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் மற்ற சிப்பந்திகளுக்கும் ஆடைகள் வழங்கிக் கௌரவித்தார்கள்.

திரு. கல்யாணசுந்தரம் பிள்ளையவர்கள் "கேதார யாத்திரையில் எல்லோரும் ஓர் உயர்ந்த இடத்திற்குப் போனதால் இனி அந்த உயர்ந்த நிலையிலிருந்து கீழ்நிலைக்கு வரக்கூடாது" என்ற அருமையான கருத்தைத் தெரிவித்தார்கள்.

கயிலை மாமுனிவர் அவர்களும் இதேகருத்தை வலியுறுத்திப் பஞ்சாக்ஷரத்தின் பெருமைகளைக் கூறி, ஒவ்வொருவர் வீட்டிலும்

ஒருநாளைக்கு ஒருமுறையேனும் குடும்பத்தினர் எல்லோரும் சேர்ந்து "ஓம் நமசிவாய" மந்திரம் செபிக்க வேண்டுமென்றார்கள்.

செவ்வாய்க் கிழமை காலை காசியை விட்டுச் சென்னைக்குப் பயணமானோம். வரும் வழியில் காசிப்பேட்டைக்கும் விஜயவாடாவுக்கும் நடுவில் புயல்காற்றுடன் மழையால் பெரு வெள்ளம். இரயில் பாதை இருபுறமும் ஒரே வெள்ளக்காடு. இரயில் விஜயவாடாவரை மிகவும் மெதுவாகவந்தது. அதனால் மூன்றுமணி நேரம் தாமதமாக புதன் இரவு 11 மணிக்குச்சென்னை வந்து சேர்ந்தோம்.

## 14. குருவருளே துணை

இந்தப்புனிதயாத்திரையை ஏற்று நல்லமுறையில் நிறைவுற உதவிய கயிலைமாமுனிவர் அவர்களை என்றும் மறக்கமுடியாது. இந்த யாத்திரையில் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை அவர்கள் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து ஒவ்வொரு வரையும் நலன் விசாரித்து, பஸ்ஸிலோ, இரயிலிலோ பிரயாணம் செய்தபோதுகூடத் தின்பண்டங்கள், பழம் முதலியவைகளைக் கொடுக்கச்செய்து, தகாதவைகளை விலக்கச்செய்து பயணம் மிகவும் சிறப்பாக அமையும்படி செய்தார்கள். அவர்கள் விருந்தோம்பலைச் சொற்களால் சொல்லி முடியாது! அவர்கள் இல்லையென்றால் இந்தக் கடினமான யாத்திரையை எங்களுடன் வந்திருந்த பல வயதான பெண்கள் மனதால்கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாது! இதை அவர்களே பலமுறை சொல்லிச் சொல்லிக் கயிலைமாமுனிவருக்கு நன்றி தெரிவித்தார்கள்.

இவ்வளவு கடினமான யாத்திரையின் பயன் என்ன என்று கேட்கலாம்! இதனால் கிடைத்த பலனை அவரவர் உள்ளம்தான் கூறமுடியும்!

மேலே உயர்ந்த இடத்திற்குச் சென்று சிவபெருமானையும் விஷ்ணுவையும் தரிசித்த நாம் இனியாவது பாபச்செயல்களில் ஈடுபடாமல், உண்மை, அன்பு என்றும் இவைகளைக் கடைப்பிடித்துத் தூயவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதியோடு அதைக் கடைப்பிடித்தால் அதுவே சிவனை அடையும் வழி. அதுவே உண்மையான பலன்! யாத்திரையின் முக்கிய நோக்கமும் இதுதானே!

"கங்கையாடி லென் காவிரி யாடிலென்
கொங்கு தண் குமரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீராடி லென்
எங்கும் ஈச னெனுதவர்க் கில்லையே"

என்றார் திருநாவுக்கரசர்.

"கங்கையில் நீராடுவதினால் சகலபாபங்களும் அகன்று விடுகின்றன என்றாலும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. கங்கையில் இறங்கி நீராடுவதற்கு முன், ஒருவன் செய்த பாபங்களெல்லாம் கரையிலுள்ள மரங்களில்போய் ஒளிந்துகொண்டிருந்து, அவன் நீரினின்று வெளிவந்ததும் திரும்பவும் அப்பாவங்கள் அவன் மீது ஏறிக்கொள்வதாகக் கூறுவதுண்டு. ஆகவே புண்ணிய கங்கையில் ஸ்நானம் செய்தாலும் மறுபடியும் அவன் பழைய மனிதனாகவே இருக்கிறான். அதனால்தான் சொல்கிறேன். பக்தி வேண்டும், பொன், புகழ், போகம் இவைகளிலுள்ள பற்றுதல் அகலவேண்டும் என்று மனமுருகிப்பகவானைப் பிரார்த்தனை செய்வீராக" என்று உபதேசித்தார் இராமகிருஷ்ணபரமஹம்சர். உண்மைதானே! குறிக்கோளும் பக்தியுமில்லாத பயணம் ஒருபோதும் பயனளிக்காது!

நானும் என்மனைவியும் இப்புனித யாத்திரையில் கலந்து கொண்டதே குருநாதர் அருளால்தான்! தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசிக்க சென்றபோது அங்குக் கயிலைமாமுனிவர் அவர்களைத் தரிசித்தேன். அப்போது என்மனைவி காசிக்குப் போகவேண்டுமென்று விரும்புவதாக விண்ணப்பித்தேன். எஜமான் சுவாமிகள், "செப்டம்பர் 13உ புறப்பட்டுக் காசிக்குத்தாம் செல்வதாகவும் எத்தனைபேர் வேண்டுமானாலும் தன்னுடன் காசிவரைவரலாமென்றும் அதன் பிறகு யமுனோத்ரி, கங்கோத்ரி, கேதார், பத்ரி செல்ல ஒன்று அல்லது இருவர் வரலாம்" என்றும் மொழிந்தார்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் உத்தரவும் ஆசியும் பெற்றேன் திரு மயிலாடுதுறையைவிட்டுப் புறப்படுமுன்பும் அவர்களை வணங்கினேன். அவர்கள் அன்புடன் புத்தாடைவழங்கிக் கங்கையில் நீராடி, அதை உடுத்திக்கொள்ளும்படி அருளாசிவழங்கினார்கள்.

இப்படித் தருமையில் ஆரம்பித்த யாத்திரை குரு அருளால்தான் மிகமிக நல்ல முறையில் – ஒரு சிறு இடையூறு கூட இன்றி – இனிதே நடந்தது. மயிலாடுதுறை வந்ததும் தருமை சென்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வணங்கி வழிபட்டு அவர்கள் அருளாசியைப்பெற்றுத் திருத்தலயாத்திரையைப் பூர்த்திசெய்து கொண்டேன்! மனத்தில் ஓர் அலாதி மகிழ்ச்சி! குருவருளேதுணை!

( நிறைவுற்றது )

# கதிரவன் குடும்பம்

சாக்ரெடீஸ் (Socretes) என்ற கிரேக்க தத்துவ ஞானி தன்பால் பயிலவரும் மாணவரை "உனக்கு வானசாத்திரம் வருமா?" என்று கேட்பார். அதனைப் பயின்றுவிட்டு, பின் தன்பால் வரப் பணிப்பார். "வானசாத்திரம் அறியாதவன் தத்துவ ஞானத்தைப் பயிலத் தகுதி அற்றவன். வானசாத்திரம் அறிந்தவனுக்குத்தான் மானிட வாழ்வின் நிலையாமை புரியும்; தான் இருக்கும் இருப்பை அவனுல்தான் புரிந்துகொள்ள முடியும்" என அவர் விளக்குவது வழக்கமாம்.

தத்துவஞானம் பயில்கிறேமோ இல்லையோ? நாம் இருக்கும் பூமியைப்பற்றியும், நாடோறும் காணும் கதிரவனைப்பற்றியும், தேய்ந்து வளரும் நிலவைப்பற்றியும், எண்ணிறந்த விண்மீன் கள் பற்றியும் ஓரளவாவது நாம் தெரிந்துகொள்ளவேண்டாமா?

ஓரிரவில் விண்வெளியை நோக்கினுல் அங்கே கண் சிமிட்டிக் காட்சிதரும் விண்மீன்கள் கணக்கற்றவையாய்க் காணப்படுகின்றன. ஒருபெரிய தொலைநோக்கியால் பார்த்தால் கூட அவை சிறுசிறு புள்ளிகள் போலத்தான் தோன்றுகின்றன. அவற்றின் உண்மையான உருவத்தை நாம் தெளிவாக அறிய முடியவில்லை. கோடிக்கணக்கில் காணப்பெறும் விண்மீன்களில்— கோளகளில் சிலவற்றையேனும் அறிதல் அவசியமாகும். மணி வாசகப் பெருந்தகை அண்டப்பகுதியின் விரிவை – அதன் காட்சிச்சிறப்பை அழகாகக் கூறுவார்,

" அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றஎழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

என்று விதந்து ஓதுவார். என்ருலும் பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற நியாயத்திலே நாம் வாழும் சூரிய மண்டலத் தைப் பற்றிக் – கதிரவன் குடும்பத்தைப்பற்றி இப்பகுதியில் சிந்திக்கலாம். கதிரவன் சிறப்பைப் பற்றிப் பலசமயத்தவரும் பல நாட்டவரும் பலபடப் பேசுகிருர்கள் – வணங்கவும் செய் தார்கள். தமிழ்மக்கள் தைப்பொங்கலை ஒட்டிச் "சூரியன்

பொங்கல் " இடுவது நாம் அறிந்ததே! பகலவனின் சிறப்பைத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் தொடக்கத்திலேயே பேசுவார்:

" உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு "

பலர் புகழ் ஞாயிற்றைப்' பல கோள்கள் சுற்றிவருகின்றன. ஞாயிறு தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது. ஞாயிற்றை ஒன்பது கோள்கள் ஒழுங்குறச் சுற்றிவருகின்றன. அவை முறையே புதன் ( மெர்குரி Mercury ), சுக்கிரன் ( வீனஸ்: Venus ) பூமி (Earth), செவ்வாய் (மார்ஸ்: Mars), வியாழன் (ஜூபிடர், Jupiter). சனி (சாட்டர்ன்: Saturn), யுரேனஸ் (Uranus), நெப்டியூன்: (Neptune) ப்ளூட்டோ (Pluto) ஆகிய கோள்கள் ஆதித்தனைச் சுற்றுவனவாகும். கதிரவனுக்கு அண்மையிலுள்ள கோள்களான புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகிய நான்கும் உள்நிலைக் கோள்கள் ( Inner Planets ) எனப்பெயர் பெறும், கதிரவனுக்குச் சேய்மையிலுள்ள வியாழன், சனி, யுரேனஸ்• நெப்ட்யூன், புளூட்டோ ஆகிய ஐந்தும் வெளிநிலைக் கோள்கள் (Outer Planets) எனப்படும். நிலவு ஒரு தனிக்கோள் அல்ல– அஃது பூமியைச் சுற்றும் ஒரு துணைக்கோளாகும் (Sub - Planet) முதலில் கதிரவனைப் பற்றிக் காண்போம். பின்னர் கதிரவனின் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய ஒன்பது கோள்களைப்பற்றியும் ஒருவாறு கருதிச் சிந்திப்போம். இந்த ஒன்பது கிரகங்கள்தான் கதிரவனைச்சுற்றிவருவதாகவிஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்•

## கதிரவன்

இம்மண்ணுலகில் வாழ்ந்துவரும் அனைத்து உயிர்கட்கும் உயிர் நாடியாகத் திகழ்வது கதிரவன். கதிரவனது ஒளியும் வெப்பமும் வளமும் நமக்குக் கிடைத்திரா விடில் பூமியில் எவ்வித உயிர் இனமும் தோன்றியிருக்க முடியாது. பூமியும் பிற கோள்களும் கதிரவனது கருணையால்தான் தத்தம் வாழ்வுநலன் களைப் பெறுகின்றன. இதைக் கருதித்தான் இந்து சமயத்தில் " சௌரம் " என்ற கதிரவன் வழிபாடு நிலவுகிறதுபோலும்.

கதிரவன் வாயு வடிவான ஒரு பெரிய நெருப்புக் கோள மாகும். இதன் அளவு குறுக்காக 8, 67, 000 மைல்கள். இது பூமியின் குறுக்களவைவிட சுமார் 180 மடங்கு பெரியது: கதிரவனின் மேற்பரப்பு நிலவுலகின் மேற்பரப்பைவிட 12, 000 மடங்குபெரியது. இதன் பருமன் பூமியின் பருமனை விட13, 00, 000

மடங்கானது என விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். பூமியின் ஈர்ப்பு ஆற்றலைவிட (Grarvitation) கதிரவனின் ஈர்ப்பு ஆற்றல் 28மடங்கு அதிகமானது. சூரியன் நம்பூமியிலிருந்து 9, 30, 00 000 ( ஒன்பது கோடியே முப்பதுலட்சம் ) மைல் தொலைவிலுள்ளது.

கதிரவனிலிருந்து உற்பத்தியாகும் வெப்பத்தின் அளவு அபரிதமிதமானது. அதன் மேற்பரப்பின் வெப்பநிலை சுமார் 12, 000 Fo என்றும், உட்புறத்தின் வெப்பநிலை 4, 00, 00, 000 Fo ( நாலுகோடி ) என்றும் விஞ்ஞானிகள் ஒருவாறு கணித்துள்ளனர். சூரியன் வெப்பத்திலிருந்து நாம் அவ்வளவும் பெறுவதில்லை – ஒருசிறிதே பெறுகிறோம். அதன் வெளியீட்டு வெப்பம் 27, 000 கோடி அளவு என்று வைத்துக்கொண்டால் நாம்பெறும் வெப்பம் வெறும் 135 தான். கதிரவனின் நீரிய அணுக்கள் ( Hydrogen atoms ) பரிதிய அணுக்களாகக் ( Helium atoms ) கணந்தோறும் மாறிக்கொண்டே இருப்பதால் இவ்வளவு ஆற்றலும், ஒளியாகவும் வெப்பமாகவும் வெளிப்படுகிறது. படைப்பின் அமைப்பு நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டது அன்றோ?

கதிரவனின் வடிவமைப்பு உள்ளும் புறமும் ஒரே திண்மையாக இல்லை. வெங்காயத்தின் புரை போன்று வேறுவேறு நிலையில் உள்ளது. முதல்புரை ஒளிமுடி ( Corona ) என்பது. இந்த ஒளிமுடியில் மிகமிக நுண்ணிய அணுத்திரள்களும், மின்சாரம் ஏறிய துகள்களும் அருவியிட்டு ஓடுகின்றன. அடுத்து உள்ளே காணப்பெறும் புரைக்கு, நிறப்புரை (Chromosphere) எனப்பெயர் இது செவ்வானம் போல் திகழும் செந்நிறம் கொண்டு இயங்கும் ஒருவாயு மண்டலம். இதன் ஆழம் ஐயாயிரம் மைல். இதனுள் எப்போதும் சுண்ணம். நீரியம் ஆகியவை கதிரவனது கனல் வாய்ப்பட்டுக் கொதிப்பேறிக் கொந்தளித்துக் கொண்டுள்ளன. மூன்றுவது புரை தலைகீழ்ப்புரை ( Inverse Sphere ) யாகும். இதன் ஆழம் ஆயிரம் மைல். ஒளி வண்ணக்காட்சியில் இது மாறுபட்ட நிலைகளைக் காட்டுகிறது. நான்காவது ஒளிப்புரையாகும் ( Photosphere ). இதுதான் கதிரவனின் உண்மைப்பிழம்பாகும். இங்கிருந்துதான் ஒளிக்கதிர்களும் கனற்கதிர்களும் பிறக்கின்றன. இவ்வொளிப் பிழம்பினைக் கண்களால் காணின் கண்கள் அடுத்த நொடியில் கரிந்து போகும்.

கதிரவனது உருவத்தில் அடிக்கடிக்கரும்புள்ளிகள் காணப் பெறுகின்றன. மெருகிட்ட வெள்ளித்தட்டில் மையைத் தெளித்தால் போன்று இவைக்கதிரவனின் ஒளிப்பிழம்பில்

தோற்றமளிக்கின்றன. இவை உண்மையில் கருப்புநிறம் உடையன அல்ல. கதிரவனது ஒளிப்பிழம்பின் நடுவில் அமைந்திருத்தலால் இவற்றின் ஒளி மங்கிக்கறுத்துள்ளது. தோற்றமளிக்கும் ஒவ்வொரு புள்ளியின் அளவும் மிகப்பெரிதாகும். சிலவற்றின் குறுக்களவு 1, 00, 000 மைல் ஆகும். ஒவ்வொன்றிலும் பல பூமி உருண்டைகளை அடக்கிவிடலாம். இவை காந்தப்புயலை உண்டாக்கி அவை பூமியில் படர்கின்றன. இப்புள்ளிகளின் விளைவாகவே பூமியின் துருவப்பகுதிகளின் செவ்வானச்சோதி ( Aurora Borealis ) எனப்படும் அற்புதக்காட்சி தோன்றுகிறது.

கதிரவனைச் சுற்றும் ஒன்பது கோள்களின் தொலைவு பற்றிக் குறிப்பிடவேண்டுவது அவசியமாகும். மெர்குரி எனப்படும் புதன் என்னும் கோள் 3, 60, 00, 000 (மூன்று கோடியே அறுபது லட்சம் ) மைல் தூரத்தில் உள்ளது. வீனஸ் எனப்படும் வெள்ளி 6, 72, 00000 ( ஆறுகோடியே எழுபத்தி இரண்டுலட்சம் ) மைல் தொலைவு. நம் பூமிக்கும் பகலவனுக்கும் உள்ள தூரம் 9, 29, 00, 000 ( ஒன்பது கோடியே இருபத்து ஒன்பது லட்சம் ) மைல் மார்ஸ் எனப்படும் செவ்வாயிலிருந்து 14, 15, 00, 000 ( பதினான்கு கோடியே பதினைந்து லட்சம் ) மைல். ஜுபிடர் எனப்படும் வியாழனிலிருந்து 48, 33, 00, 000 ( நாற்பத்தெட்டு கோடியே முப்பத்து மூன்று லட்சம் ) மைல். சாட்டர்ன் எனப்படும் சனி கிரகத்திலிருந்து 88, 61, 00, 000 ( எண்பத்து எட்டு கோடியே அறுபத்தொரு லட்சம் ) மைல். யுரேனஸ் என்னும் கிரகத்திலிருந்து 178, 28, 00, 000 (நூற்று எழுபத்தெட்டு கோடியே இருபத்தெட்டு லட்சம்) மைல். நெப்டியூன் என்னும் கோளிலிருந்து 279, 25, 00, 000 ( இருநூற்று எழுபத்து ஒன்பதுகோடியே இருபத்தைந்து லட்சம் ) மைல். புளுட்டோ என்னும் கோள் 367, 50, 00, 000 ( முந்நூற்று அறுபத்து ஏழு கோடியே ஐம்பது லட்சம் ) மைல் தொலைவில் உள்ளது.

— தொகுத்தளித்தவர்: சுவாமி வீரபாகு.

ஆதாரம் :—

A History of the Universe
by Arthur S. Greger, ( New york )

Captives of the Sun
by Jame S. Pickering, ( New york )

The New Book of Knowledge. Vol. I Edited
by Sir John Hammerton ( London )

# திருநாவுக்கரசர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.

[ தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 5—8—1984 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப் பெற்ற கட்டுரை.]

தருமையாதீனத் திருமடம் ஓர் அருங்கலையகம்! ஞான நிலையம்; முதல் ஞாயிறு உபதேசம் பெறும் இனிய நினைவோடு திருமடத்துக்குள் பிரதானவாயில் வழியாக நுழைகிறேன்.

முதல் தூண்! ஆம். அது முதல்தரமான கலைத்தூண்! அழகான யாளி! தூணில் விளங்கும் – இல்லை...... இல்லை...... தூணாகவே விளங்கும் சிற்பம் அது! துதிக்கையைத் தூக்கிய வாறு தன்வாயைப் பிளந்து நிற்கிறது கோரைப் பற்கள் தெளி வாகச் செதுக்கப்பட்டுள்ளன வாயின் உள்ளே வெற்றிடம் போன்ற அமைப்பு. கையைச் செலுத்துகிறேன்! வாயினுள் ஓர் உருண்டை! பக்கவாட்டில் உள்ள வட்டத் துளைகள் வழியாக எடுக்க முயல்கிறேன்! கல்லால் ஆன அந்த உருண்டையை எடுக்க முடிய வில்லை.

சிற்பி அதன்வாயில் அந்தக்கல்லுருண்டையை எப்படிப் போட்டிருப்பார்! போட்டிருக்க இயலாது! வாயின் உட்பகுதி யைத்தான் பக்க வாயின் வழியே துளையிட்டுத் தன் அபார சக்தி வாய்ந்த அற்புத உளியின் மூலம் அறிவைப் பயன்படுத்தி ஆக்கித் தந்திருக்கிறுன்! அங்கே வரும் குழந்தைகள் முதல் பெரியவர் வரை அந்தக் கல்லுருண்டையை உருட்டிப் பார்க் காமல் போவதில்லை! அவர்களுக்குள்ளே அடியேனும் ஒருவன் தானே!

மணி 10. பூசை முடித்து, திருக்கோயில் வழிபாடு ஆகி உபதேசம் தொடங்கும் நேரத்தில் பண்டாரக்கட்டில் அன்பர் கள் குழுமியிருந்தனர்.

உபதேசம் தொடங்குகிறது. திருநாவுக்கரசர் புராணத்தை ஒட்டிய சிந்தனே ! ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அந்த மாதச் சிறப்பை முதலில் விளக்கி, அதனையடுத்துப் புராணச் சிந்தனே களை அளித்தருள்கின்றார்கள்.

" ஆகஸ்டு மாதம் இது. இந்தியநாடு சுதந்திரம் பெற்ற மாதம். சுதந்திரம் என்பதன் பொருள் கட்டுப்பாடு; பொறுப்பு. தகப்பனுர் சம்பாதித்து மகன் படிக்கும் காலத்தில் உயர்ந்த ஆடை முதலியவற்றை வாங்க விரும்புகிறன். அதே மகன் தான் சம்பாதித்துச் செலவழிக்கிற காலத்தில்கட்டுப் பாட்டுடன் பொறுப்புடன் வாழத்தலைப் படுகிறன். பொருளாதாரத் துறை யிலும் சுதந்திரம் என்பது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடப் பதையே குறிக்கும். சட்டம் இல்லாமலே – ஒழுங்காக நடப்பதே சுதந்திரம். அதிகாரம்இன்றியேகடமைகளை ஒழுங்காகச்செய்வது சுதந்திரம்.

வரையறைக்குட்பட்ட குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் என விரிவு கொண்ட மனப்போக்குத் தேவை எனக்குறிப்பிட்டு வினேபா,காந்தியடிகளின்கோஷங்களைஎடுத்துக்காட்டினர்கள். காந்தியடிகள் 'ஜெய்ஹிந்த்' என முழங்கினர். விேைபா 'ஜெய் ஜெகத்' என்றார். உலகம் என்ற உணர்வு விரிவானது. 'உலகம் யாவையும்' உலகம் உவப்ப ' உலகெலாம் ' – என்று நம் முன் னேர் சிந்தனே உலகைப் பற்றியதாகவே இருந்தது" பாதாதி கேசாந்தம் என்பது போல நம்மிலிருந்து படிப்படியாக உலகம் என்ற உணர்வு மலர வேண்டும். அன்பு அருளாக மலர்ந்து இன்னர் இனியார் என்று வேறுபாடின்றிப் பரவுதல் வேண்டும் என அருளிய போது குருமணிகளின் உலக நலம் கருதிய நாட்டத்தை எண்ணிப் பெருமை கொள்கிறேம்.

திருநாவுக்கரசர் பற்றிச் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையின் அடிகளையும் அருளி விளக்கம் தருகின்றார்கள். " திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன் " என்பது அத்தொடர். ' திருநின்ற செம்மை ' என்ற தொடர் எத்தனே அற்புதமானது ! நிலையாக உள்ளது எதுவோ, அதுவே இயற்கை. தத்துவம் புரியாமல் வானம், சோலை முதலியவற்றை இயற்கை எனக் கருதுகிறேம். இயற்கை என்பது இயல்பு–என்றும் ஒருபடித்தாய் இருப்பது; மனிதன் செயற்கை; வளர்வுதேய்வு உடையவன்" – குருநாதர் மேலும் விளக்குகின்றார்கள். வளர்ச்சியும் தளர்ச்சியும் இல்லாதது இயற்கை.

திரு என்பதற்குக் 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' எனப்பொருள் கொண்டனர் பெரியோர். "மணம் கமழ் தெய்வத்திரு" என்பது இறைவனது அருள் நிலையை விளக்கும்தொடர். என்றும் நிலையாய், என்றும் அழகாய் (பூரணனாய், பரிபூரணனாய், நின்றதுவே திரு. சமயகுரவர் இறைவனைத் 'திருவே' என்றனர். 'போகமும் திருவும்புணர்ப்பானை' என்று அருளினர், 'குறைவிலா நிறைவே' என்று குறித்தனர். இன்பத்தின் ஊற்றுக்கண்ணாகச் சம்புவாக இறைவன் விளங்குகின்றான்.

செம்மை என்பது நேர்மை, தூய்மை, நன்மை என்னும் பொருளை உடையது நாட்டுவழக்கிலும் 'செம்மையாகச்செய்' என நன்றாக என்னும் பொருளில் வழங்குகின்றது." இங்ஙனம் விளக்கம் அருளியகுருமணிகள் நின்ற திருவாகிய சிவபரம்பொருளை முழுமுதலாகச் செம்மையாகப்பற்றிக்கொண்டவர் நாவுக்கரசர் என அருளினர்கள்.

திருத்தொண்டர் திருவந்தாதியில் திருநாவுக்கரசர் பற்றிய "நற்றவன் நல்லூர்" 'மணியினை' எனத்தொடங்கும் பாடல்களை விளக்கிச் சேக்கிழாரின் வாக்கினைத் தொடர்கிறார்கள்.

"திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன்; பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை உணராதேன்"

என்பது சேக்கிழார் திருவாக்கு. இப்பாடற்குப் பொருள்கொள்ளும்போது 'திருநாவுக்கரசு சீர்பரவலுறுகின்றேன்' எனவும் 'வளர் திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர் சீர்பரவலுறுகின்றேன்' எனவும் 'வாகீசர் சீர்பரவலுறுகின்றேன்' எனவும் பிரித்துப்பொருள் கொள்ளுதல் வேண்டும்.

'ஞானத் தவமுனிவராகிய வாகீசர் புகழை வழிபட முனைவேன்' என்கிறார்சேக்கிழார். 'ஒருநாக்கு' அவர் புகழைஉரைக்கப் போதாது என்றும் எண்ணுகிறார்.

திருமுனைப்பாடிநாடு—இது நடுநாடு ஆகும், நடுநாடுஎன்பது சோழநாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் நடுவில் இருப்பது. முனையரையர்கள் ஆண்டநாடு முனைப்பாடிநாடு. நரசிங்கமுனையர் போன்ற முனையரையர்கள் ஆண்டமையால் திருமுனைப்பாடி நாடு எனப்பெற்றது. சேக்கிழார் இதன் பெருமையை

" மறந்தருநீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானல் நம்மளவோ ? பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு "

எனக்கூறி வியக்கிருர்.

திருநாவுக்கரசர்திருமுனைப்பாடி நாட்டில்தெய்வநெறிச்சிவம் பெருக்கும் திருவாமூரில் குறுக்கையர் குடியில் அவதரித்தார். குலம் – என்பது பெரிய அளவில் கூறப்படுவது குடி என்பது சிறியது ; கோத்திரம்போன்ற அமைப்பினது என்பதனைப் பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கிஞர்கள்.

தந்தையார் புகழனர்; தாய் மாதினியார் – இப்பெயர்கள் இயற்பெயர்கள் தாம் எனினும் காரணப் பெயர்கள் போன்ற நிலையை அப்பெரியோர்கள் தம் வாழ்வின்மூலம் அளித்து விட்டனர். "மருள்நீக்கியார்" என்பது திருநாவுக்கரசரின் இயற் பெயர். 'இருள்நீக்கி' என்று ஓர் ஊர்ப்பெயர் உண்டு. அது போல 'மருள்நீக்கி' என ஒரு பெயர் இருத்தல் இயல்பே. திலகம்போல வாழ்ந்தமையின் நாவுக்கரசரின் தமக்கையார் எனப்பட்டார் திலகவதியார்.

புகழனர் மாதினியார் செய்த தவப்பயனல் திலகவதியாரும், திருநாவுக்கரசரும் அவதரித்தனர். இளமையிலேயே தந்தை தாயாரை இழந்தார் மருள்நீக்கியார். திலகவதியார்க்குப் பெற் ரோர் நிச்சயித்திருந்த கலிப்பகையாரும் போர்மேற் சென்ற காலத்தில் வீரசுவர்க்கம் புகுந்தார். 'அவர்க்கு என நிச்சயிக்கப் பட்டநான் உயிர்துறப்பேன்' எனக்கருதிய திலகவதியார், தம்பி யார் உளராக வேண்டும் என வைத்த தயாவால் அனைத்துயிர்க் கும் அருள்தாங்கி உயிர்தாங்கி இருந்தார். மருள்நீக்கியார் மனம் பதைத்தார். சமணசமயம் புகுந்தார்.

மருள்நீக்கியார் ஏன் சமண சமயம் புகவேண்டும் ? குருமணிகளின் விளக்கம் இதோ! " தந்தை, தாய், இறந்தமை, திலகவதியார்க்கு என நிச்சயித்த கலிப்பகையார் இறப்பு திலகவதியார் உயிர்விடத் துணிந்தமை முதலியன அவர் மனத்தைப் பாதித்தது. நிலையாமை உணர்வு அவருக்குத் தோன்றியது. சமண சமயத்தினர் நிலையாமையை உயிர்க்கொள் கையாகக் கொண்டவர்கள். எனவே, மருள்நீக்கியார் சமண சமய நாட்டம் கொண்டார். சமணம் புகுமுன் காவளர்த்தும்

குளம் தொட்டும் ஈகைவினைத்துறை நின்றார். நம்பர் அருளாமையால் சமணம் புக்கார்.

திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணர் நிலையத்தில் தங்கி அச்சமயநூல்களைக் கற்றுஒழுகினர். தருமசேனர் என்றநிலையை எய்தினர். தம்பியார் பொருட்டு வாழ்ந்த திலகவதியார் திருவதிகை அடைந்து திருக்கோயிலில்பணிபுரிந்தார். அதிகைப் பெருமானிடம் தம்பியார் தாய்மதம் திரும்பச் செய்யுமாறு வேண்டினர். இறைவன் சூலை கொடுத்து ஆட்கொள்வோம் என அருளினர். மருள் நீக்கி யாருக்குச் சூலைநோய் கொடுத்தார். சமணரின் மணி, மந்திர, ஔடதங்களால் ஒரு பயனும் விளைய வில்லை. நாவுக்கரசர் பெரிதும் வருந்தினர் தமக்கையாரைக் காணவிரும்பிச் சமையல்காரன் மூலம் சொல்லியனுப்பினர்.

கங்குல் புறத்திருளும் அகத்திருளும் நீங்க மருள்நீக்கியார் அதிகை வந்தார். திலகவதியார், திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்து ஓதித் தந்தார்; சற்று வலி குறைந்தது. அதிகைப் பெருமானிடம் அழைத்தேகினர் திலகவதியார். பாடும் உணர்வு தோன்றியமையால், 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கிப் பாடினர். சொற்களால் சொல்ல முடியாத சூலைநோயின் துன்பம் நீங்கியது! நாவுக்கரசர் நோயின்தன்மையைக் கூடச் சொல்லிக் காட்டுகிறார்! வயிற்றுவலி 'குடரோடு துடக்கி முடக்கி இடுகிறதாம். இப்படித் தமிழ் மாலையினைக் குருமணிகள் அந்தப் பதிகத்தில் அமைந்த அரிய பல கருத்துக்களுக்கும் விளக்கம் அருளினர்கள். அவை வருமாறு :-

பெரியோரைப் பிழையாமையைக்,

" காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைகொள்ளும் வழித்துறை ஒன்றறியேன் "

என்னும் தொடர்கள் விளக்கும்.

" அடியார் படுவதுஇதுவேயாகில் என்போலிகள் (சாதாரண மனிதர்கள்) இனித்தெளியார்' என்பதுதன்னிரக்க உணர்வைக் காட்டுவதாய் உள்ளது "

" நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் " " வணங்குவன் " " சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் " முதலிய

தொடர்கட்கு முதற்பாடலே சரியான விளக்கம் தந்துவிடும். மறவேன், இடமாக வைத்தேன் என்பனவற்றுடன் ' இனி ' என்பதைக் கூட்டிப்பொருள் கொள்வதே சிறப்பாக அமையும்.

' கூற்று ' என்னும் சொல்லின் பொருள் சொல் என்பது. கயிலாயத்தில் உமையம்மையோடு இறைவன் எழுந்தருளி இருந்தான்; இராவணன் கயிலையைப் பெயர்த்தான்; அம்மை அஞ்சினள் மலைபெயர்ந்து அசைதலைக்கண்டு! பெருமான் தம் கால் கட்டை விரலூன்றினர்; மலை அழுந்தியது. மலையைப் பெயர்த்து நின்ற இராவணன் துன்பமடைந்தான். ஏது செய்வ தென அறியாமல் விழித்தான்; அங்கிருந்த வாகீச முனிவர் இறைவன் சாமகானப் பிரியன் ; சாமகானம் இசைத்தால் இறைவன் கேட்டு மகிழ்வான்; ' நின்துன்பம் தீர்ப்பான் ' என மொழிந்தார். இராவணனுக்கு வழிகாட்டினர். இப்படி வாகீச முனிவராகத் தாம் இருந்தபோது இறைவன் அளித்த தண்டனை யிலிருந்து தப்புவதற்கு இராவணனுக்கு வழிகாட்டிய சொல்லே தற்போது சூலையாகவந்து துன்புறுத்துகின்றது என்பதே கூற்று ஆயினவாறு என்பதன் பொருள்.

இப்படிப் பல தத்துவங்களை அருளிய ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் திருநாவுக்கரசர் புராணத்தில் வரும் நாட்டுவளம் கூறும் பாடல் ஒன்றின் உள்ளுறைக் கருத்தினையும் தெளிவித்தார்கள். கரும்பு விளையும் வயல்; கரும்பின் தோகையில் தேன்கூடு; கரும்பை வெட்டுகின்றனர்; தேன்கூடு சிதைந்து தேன் சிந்திற்று; கரும்பினை வெட்டினமையால் சாறும் பெருகிற்று; கரும்பின் சாறும் தேனும் கலந்து வெள்ளமாய்ப் பாய்ந்தது. மடை உடைந்தது. கரும்பின் கட்டியைக் கொண்டே மடையை அடைத்தனர்; இது பாடற்கருத்து. திருநாவுக்கரசர் புறச்சமயம் சார்ந்திருந்த நிலையில் திலகவதியார் அவரைத்தடுத்து நிறுத்திய மையை இது காட்டுவதாய் இருக்கிறது. கரும்பஞ்சாறு நாவுக் கரசருக்கும் கருப்பங்கட்டி திலகவதிக்கும் திலகவதியார் நாவர சரைப் புறச்சமயத்தினின்றும் காத்தது மடையடைத்தமைக்கும் பொருந்துவதாகின்றது.

தத்துவங்கள் அறிவுக்குவிருந்தாய் அமைந்தன! உபதேசம் நிறைந்தது. கனிச்சாறு தந்தனர்; பருகினேம்! இனிய உணர்வு களோடு இல்லம் திரும்பினேம்.

வாழ்க குருமணிகள் !

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

அனைத்துலகச்

# சைவசித்தாந்த பண்பாட்டு ஆய்வுக் கழகம்

## நிலைநிதி வழங்கியவர்கள் விபரம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சைவத்தின் மேம்பாட்டைத் திருவுளம் கொண்டு "அனைத்துலகச் சைவசித்தாந்த பண்பாட்டு ஆய்வுக் கழகம்" என்ற நிறுவனத்தைத் தருமை ஆதீனத்தில் ஏற்படுத்தியுள்ளார்கள். இதன்மூலமாகச் சைவ சமயத்தின்சிறப்பினை ஒப்பீட்டு ஆய்வின்வழி உலகம் தழுவிய அளவில் பரவச்செய்யத் திட்டங்கள் பல உள்ளன. இதற்காக மூலதனம் ரூபாய் இருபது லட்சம் அளவு தேவைப் படுகின்றது. நமது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ரூபாய் பத்துலட்சம் வழங்கக் கருணைபாலித்து முதல் தவணையாக ரூபாய் ஐந்து லட்சம் வழங்கியுள்ளார்கள். இம்மாபெரும் ஞானவேள்விக்கு அன்பர்கள் தங்கள் பங்கை இயன்ற அளவு அளித்து இப்பணி சிறந்தோங்கி வளர உதவ முன்வருவார்களாக. இச் சிறப்புமிக்க நற்பணிக்கு நிலைநிதி வழங்கியவர்களின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1. | திருச்சி ப. முக்கப்ப பிள்ளை | ரூ. 1000—00 |
| 2. | சிதம்பரம் பு. வாகீசம் பிள்ளை | 1000—00 |
| 3. | திருச்சி பாப்புலர் ஆட்டோ மொபைல்ஸ் | 1000—00 |
| 4. | திருச்சி பாக்யசக்தி எண்டர்பிரைஸஸ் | 101—00 |
| 5. | சென்னை R. பத்மநாபன் | 1000—00 |
| 6. | சென்னை R. பார்வதி அம்மாள் | 1000—00 |
| 7. | திருநெல்வேலி M. A. அப்துல்லாஹ் | 1000—00 |
| 8. | திருவொற்றியூர் C. G. நடராஜ முதலியார் ஜெயலட்சுமி அம்மாள் | 1000—00 |
| 9. | சென்னை M. மாரியம்மாள் | 2000—00 |
| 10. | பட்டவிளாகம் சாமிக்கண்ணு | 250—00 |
| 11. | மயிலாடுதுறை வி. சா. குருசாமி தேசிகர் | 1001—00 |
| 12. | சிதம்பரம் N. M. பொன்னம்பலம் பிள்ளை | 1000—00 |
| 13. | டாக்டர். K. அரங்கசாமி பிள்ளை | 1000—00 |

| | | |
|---|---|---|
| 14. | சிதம்பரம் S. திருநாவுக்கரசு பிள்ளை | ரூ. 500—00 |
| 15. | சீகாழி சியாமளா அண்ணி அருணாசல முதலியார் | 1000—00 |
| 16. | லக்ஷ்மிவிலாஸ் பாங்க், திருக்கடவூர் | 1000—00 |
| 17. | பட்டவிளாகம் து. இராமசாமி உடையார் | 250—00 |
| 18. | பட்டவிளாகம் அ. கோவிந்தசாமி | 250—00 |
| 19. | மயிலாடுதுறை K. பாலகிருஷ்ண உடையார் | 1000—00 |
| 20. | மன்னம்பந்தல் கிராமம் ச. சம்பந்தம் | 1000—00 |
| 21. | கீழபொன்பேத்தி கிராமம் கு. ராமசந்திரன் நெடுங்காடு (கம்யூன் புதுவை) | 1000—00 |
| 22. | கீழபொன்பேத்தி கிராமம் கு. கரும்பாயிரம் நெடுங்காடு (கம்யூன் புதுவை) | 1000—00 |
| 23. | சீர்காழி தேர்வடக்குவீதி பு. பக்கிரிசாமி | 2000—00 |
| 24. | சீர்காழி Tk ஆச்சாள்புரம் வை. சடையப்பன் | 1000—00 |
| 25. | Trichy National College | 1000—00 |
| | ஆக ரூ. | 23,352—00 |

குறிப்பு :— இந்தப் பெரும்பணிக்கு நன்கொடை வழங்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு (Incometax exemption) உண்டு. The Commissioner of Incometax, Madras 600 034. Order No 2039 (4)/84 of 9—4—84.

## கண்டு பிடித்தவர் யார் ?

| | | | |
|---|---|---|---|
| 1. | கைக் கடிகாரம் | 6. | சைக்கிள் |
| 2. | டைப் மிஷன் | 7. | சினிமா |
| 3. | டெலிவிஷன் | 8. | மின்விசிறி |
| 4. | அச்சுசாதனம் | 9. | பௌண்டன்பேனா |
| 5. | ஏர்கண்டிஷன் | 10. | ஒலிபெருக்கி |

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவாரப்பாடல் பெற்ற சிவத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

இம் மாதம் 25—8—84 சனிக்கிழமை அன்று ஆயில்யத்திருநாள் திருவதிகைத் திருத்தலத்தில் மிகச்சிறப்பாகநடைபெற்றது. இத்தலத்து ஈசர் ஸ்ரீ வீரட்டேசுவரருக்கும் அம்பாளுக்கும் ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கும் மற்றும் அறுபத்து மூவர்முதலியோருக்கும் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்தன. 'திருவதிகைத் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப் புலவர் திரு. வி. சா. குருசாமிதேசிகர் 'தலயாத்திரை' பற்றியும் வித்துவான் திரு. சண்முகசுந்தரதேசிகர் 'மூவர் தமிழ்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். தலத்திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. அன்பர் பலர் வழிபாட்டில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் சமய குரவருள் மூன்றாமவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைவிழா ஆடிச்சுவாதி நாளாகிய 4—8—84 சனிக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலைவிசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பின்னர் சுந்தரர் அருள் வரலாற்றுத்தொடர்புடைய புராணப் பகுதிகள் பாராயணம் செய்யப் பெற்றன. திருத்தொண்டத் தொகைப் பாராயணம் நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் காலை மாலை இருவேளையும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். இரவு ஸ்ரீ சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனார் திருவீதியுலா நிகழ்ந்தது. திருவீதிவுலாவின் போதுதருமையாதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ. வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர் எம். ஏ. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ. ஆகியோர் அற்புதவிளக்கச் சொற்பொழிவாற்றினர். வேத பாராயணத்துடனும் திருமுறைப்

பாராயணத்துடனும் திருவீதியுலா சிறப்பாக நிகழ்ந்தது. அன்பர் பலர் தரிசித்தும், சொற்பொழிவுகள் கேட்டும் பய னுற்றனர்.

## ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருபூஜை

திருக்கயிலாயபரம்பரைத்தருமையாதீனம் ஸ்ரீஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் சந்தான குரவருள் மூன்றுமவராகிய ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருபூஜை விழா ஆவணி உத்திர நாளாகிய 28—8—84 செவ்வாய்க்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., அவர்களும், வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர், எம். ஏ., அவர்களும் உரையாற் றினர். அன்பர்பலர் வந்திருந்து வழிபட்டும், சொற்பொழிவுகள் கேட்டும் பயனுற்றனர்.

அன்று, சிதம்பரம், திருக்களாச்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருமூர்த்த ஆலயத்திலும்ஸ்ரீமறைஞானசம்பந்தருக்குத் தருமையாதீனச் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்புவழிபாடுகளும் நிகழ்ந்தன.

## திருவிளக்கு வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி திருக்கோயி லில்தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளா ணைப்படி ஆடிக்கடைவெள்ளியை முன்னிட்டு 10—8—84 வெள்ளிக்கிழமை மாலை7மணியளவில் 108 திருவிளக்குவழிபாடு நிகழ்ந்தது.

தருமபுரம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் பணிமன்றத்தினர் பொறுப் பில் நிகழ்ந்த இத்திருவிளக்கு வழிபாட்டில் சுமங்கலிகளும், கன்னிப் பெண்டிரும் கலந்துகொண்டு உரிய முறைப்படி பூசை செய்தனர். திருவிளக்குப்பூசையின்சிறப்புப்பற்றி திரு. V. முத்து சாமிகுருக்கள் உரைநிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கி அருளினர்கள்.

## நாயன்மார்கள் குருபூஜைத் திருநாட்கள்

தருமையாதீனத்திற்குச்சொந்தமானஸ்ரீஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஆடிச்சித்திரை நாளில் (3—8—84) பெருமிழலைக் குறும்பர், சுவாதிநாளில் (4—8—84) ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள், கழறிற்றறிவராகிய சேரமான்பெருமாள் நாயனர் கேட்டைநாளில் (6—8—84) கலியர், கோட்புலியார், ஆவணிப் பூசநாளில்

(24—8—84) செருத்துணையார், ஆயில்யநாளில் (25—8—84) புகழ்த் துணை நாயனுர், அதிபத்தர், மகநாளில் (26—8—84) இளையான் குடிமாறர் குருபூஜை நாட்கள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அருச்சனை சிறப்புவழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., புராணம் வாசித்து வரலாறு கூறினர்.

## இரண்டு கும்பாபிடேகங்கள்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மயிலாடுதுறை' கூறைநாட்டில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கும்பாபிடேகத்தில் 22—8—84ஆம் தேதியன்று கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அன்று காலை கும்பாபிடேகம் முடிந்த பின்னர் சிறப்புரை ஆற்றினர்கள். செங்குந்த முதலியார்கள் வீரபாகு தேவர் வழிவந்தவர்கள் என்று குறிப்பிட்டுப்பல ஆதாரங்களைக் கந்தபுராணத்திலிருந்து எடுத்துக்கூறி ஆசிவழங்கியருளினர்கள். அவையிலிருந்த பலரும் கேட்டு இன்புற்று வியந்தார்கள். அன்பர்கட்குச் சந்நிதானம் அவர்கள் பிரசாதம் வழங்கினர்கள்.

ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மணக்குடி விநாயகர் கோயில்கும்பாபிடேகத்தில் 24—8—84 அன்று கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். ஆன்மீக வாழ்வின் அவசியம்பற்றி அழுத்தமாகப்பேசிச் சிறந்ததோர் ஆசியுரை கூறி அருளினர்கள். வந்து இருந்தோர் கேட்டுஇன்புற்றுப்பயன்பெற்ருர்கள். அன்பர்கட்கு சந்நிதானம் பிரசாதம் வழங்கினர்கள்.

---

## விடை

### (கண்டு பிடித்தவர் யார்?)

| | | |
|---|---|---|
| 1. | பீட்டர் ஹென்லின் (ஜர்மனி) | — 1500 |
| 2. | சி. ஷோல்ஸ் (அமெரிக்கா) | — 1868 |
| 3. | ஜான் எல் பேர்டு (இங்கிலாந்து) | — 1926 |
| 4. | கூட்டர்பெர்க் (ஜர்மனி) | — 1450 |
| 5. | டபுள்யு ஹச். கேரியர் (அமெரிக்கா) | — 1911 |
| 6. | மேக்மில்லன் (ஸ்காட்லாந்து) | — 1842 |
| 7. | ஆஸ்ப்டின் (இங்கிலாந்து) | — 1845 |
| 8. | ஸ்கூலர் எஸ். வீலர் (அமெரிக்கா) | — 1886 |
| 9. | எல். இ. வாட்டர்மென் (அமெரிக்கா) | — 1884 |
| 10. | பின்கெல்லாஸ் (அமெரிக்கா) | — 1924 |

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(இரக்தாக்ஷிஹு புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய)
(17—9—1984 முதல் 16—10—1984 முடிய)

ஸ்ரீ இரக்தாக்ஷிஹு ஆவணிமீ 31 உ பானுவாரம் உரோகிணி நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 41 நாழிகை 19 விநாடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோக பிரஜைகள் புத்தி சத்தியினால் மதி நுட்ப சாதனைபுரிந்து ஆக்கம் பெற வேண்டி சிம்மராசியிலிருந்து கன்னியா ராசி சவகிரமணமாக புரட்டாசி மாதம் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று ஷடசீதி புண்ணிய காலம் மறுதினம் சோமவாரம் புரட்டாசி மாதம் முதல் தேதியாகும். விசேஷமாக உலகில் எங்கும் நல்ல மழை பெய்து நன்செய் நிலங்கள் செழித்து உணவுப்பயிர்களில் விருத்தி ஏற்படும். மக்கள் சாஸ்திர ஞானம் கலைக்ஞானங்களில் மேன்மை ஸ்திதியாகி நல்ல பண்பாட்டில் திகழ்வார்கள், விஞ்ஞான அறிஞர்கள் தொழில் விற்பன்னர்கள் புதிய நாகரீக வஸ்துக்களின் படைப்பில் சாதனை புரிவர். தேசங்களில் ஆளுநர்கள் பிரஜா நலம் பேணி மனுநீதி ஆட்சி புரிவர்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் தவ முனிவர்களாகத் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் குருமகா சந்நிதானங்கள் லோகத்திற்கு ஞான உரைகள் இயம்பி அருள் பிரசாதம் வழங்குவர். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் தெய்வங்களுக்கு இலக்ஷார்ச்சனைகள் இனிது நடைபெறும். மக்கள் தெய்வபக்தியில் மனவமைதியுற்று சீரிய வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை – ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் வரும். இரத்தின பூஷணம் தரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில்

கியாதி ஏற்படும். மதிநுட்பமாக எல்லாக்காரியங்களையும் நடத்தச் செய்யும். பசுபால்பிராப்தி திருப்தியளிக்கும். செப்டம்பர் 29, 30 தேதிகள்சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். உடன் அதே அளவு செலவாகும். இல்லத்தில் சாஸ்திரோக்த காரியங்கள் நடக்கும். அக்டோபர் 8தேதி அளவில் ஓர் பெரும் பொருள் கைக்குவரும். ஞாயிற்றுக் கிழமை சூரியார்ச்சனைசெய்ய குடல்அழற்சி குணமாகும். புத்திரர் களுக்குநல்லன ஏற்படும். அக்டோபர்1, 2, 3 தேதிகள் சந்திராஷ் டமம். வியாழன் வெள்ளி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். தனவருமானம் தானிய வருமானம் வந்து நிறையும். வஸ்திரபூஷணங்களை யளிக்கும். வாகன சுகம் திருப்தி யளிக்கும் எல்லா காரியங் களையும்வெற்றியாக நடத்திவரும். செப்டம்பர் 23தேதி அளவில் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படும். அரசாங்கத்தில் இருந்து நற்செய்தி வரும். அக்டோபர் 4, 5, தேதிகள் சந்திராஷ் டமம். சனி ஞாயிறு சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கணிசமாக வரும். நல்ல பூஷணம் தரும். அரசாங்ககௌரவம் தரும். பூமி இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். எல்லாக் காரியங்களும் எண்ணியிருந்தபடி வெற்றிகரமாக நடக்கும். பசு பால் பிராப்தி திருப்தியளிக்கும். அக்டோபர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன்சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வரும். அடிக்கடி அவசியமாகச் செலவும் ஏற்படும். எல்லாக் காரியங்களையும் புனிதமாக நடத்தும், பூர்வப்பொருள் பிராப்தியில் நல்லன ஏற்படும். அக்டோபர் 8, 9, தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாகநடக்கும். தனதி சௌகரியங்களில் நல்லநிலைமையை ஏற்படுத்தும். நல்லவஸ்திர பூஷணம் தரும். இல்லத்தில் சாஸ்திரோக்த நல்ல நிகழ்ச்சிகள் ஏற்படும். பூமிஇயந்திரங்களில் நற்பலன்ஏற்பட்டுவரும். எல்லா காரியங்களும் நன்முறையில் நடக்கும். அக்டோபர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். தன வருமானம் பெருமதிப்பில் வரும். ஒப்பந்தம் லேவாதேவிகளில் நல்லன ஏற்படும். நெருக்கடி சம்பவங்கள் ஏற்பட்டுப் பணச் செலவும் ஆகும். பூமி இயந்திரங்களில் விருத்திபலன்ஏற்படும். எல்லாக் காரியங்களையும் மனோ பலத்தால் நடத்தச் செய்யும். செப்டம்பர் 17, அக்டோபர் 13, 14, 15 தேதிகள சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். நல்ல தனவருமானம் வரும். நேர்மை உறுதிவார்த்தை இவற்றில் அந்தஸ்து உயரும். ஸ்திரிவழியினருக்கு டாம்பீகத்தில் உதவிகள் நல்கும். எடுத்துக்கொண்ட காரியங்கள் சமயோசித புத்தியில் நன்கு நடக்கும். செப் 18, 19 அக் 16 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். தனவருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் உத்தியோகத்தில் பிரபலஸ்திதியும் பதவி உயர்வும்தரும். பூமி இயந்திரங்களின் பிராப்தியில் நல்லன வரும். எல்லாக் காரியங்களும் அரசகௌரவத்தில் நடந்துவரும். செப் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம்கணிசமாகவரும். சகோதரர் முன்னேற்றம் புத்திரர்களின் வருங்கால நலன்களுக்கு முதலீடு செய்யும். இயந்திரவாகனம்

சீர்படும். அனைத்துக்காரியங்களும் நிதானத்தில் செயல்படும். செப் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம்-பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கெடியான தோரணைக்கு ஏற்பவரும். நல்ல வஸ்திராபரணம் தரும். இயந்திரவாகன பிராப்தியில் புதியன வரும். புத்திரர் பௌத்திரர்களினல் மகிழ்ச்சி நிலவும். செப் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். நல்ல தன வருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் செப் 24 தேதி அளவில் நன்மை உண்டாகும். ஜீவனோபாயம் தொழில்துறைகளில் நல்ல ஏற்பாடுகள் நடைபெறுவதும் அரசு நன்மைகள் ஏற்படுவதும் ஆகும். செப் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

---

## குருமணியின் அருள்மொழி

### இன்பமும் துன்பமும்

நாம் செய்த வினைகளுக்கு ஏற்பவரும் துன்பத்தை நாமே ஏற்று அனுபவிக்கவேண்டும் என்று எண்ணித் தயாராகிவிட்டால் அத்துன்பம் பாதியாகக் குறைந்து விடும்........

இன்பம்வரும்போது அறிவு மயங்குகிறது. தெளிவடைகிறது. வந்த துன்பத்தை எப்படிப் போக்குவது என்று அறிவு சிந்திக்கவும் செயலாற்றவும் செய்கிறது. எனவே இன்பம்வரும்போது அறிவு வேலை செய்யாது மயங்கும். துன்பம் வரும்போதுதான் அறிவு வேலை செய்யும். வளரும். தெளிவு அடையும். எனவே துன்பத்தை வரப்பிரசாதமாக வரவேற்கும் மனப்பக்குவம் வரவேண்டும்.